பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை(23-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:360

### வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக

# புலிகள் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து பிரதான கட்சிகள் இடையில் இணக்கம் வேண்டும்

## பதவியாவில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,நவம்பர்23

**வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அந்தயோசனை குறித்த இறுதிப்பேச்சு வரும் நேரத்தில் பிரதான கட்சிகளுக்கிடையில் சிக்கல் ஏற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.**

**பதவியா ஸ்ரீபுர மகாவிகாரையில் நேற்றுப்பிற்பகல் நடந்த நிகழ்வில் பேசுகையிலேயே பிரதமர் இப்படிக் கூறினார்.**

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

நாட்டின் பிரதான பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வு காணப்படவேண்டியது அவசியம். இப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது. மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாதவாறு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்திச் செல்லவேண்டும்.

இம்மாத ஆரம்பத்தில் மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி தம்வசம் எடுத்ததை அடுத்து, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சமாதான நடவடிக்கைகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களையே ஜனாதிபதி பொறுப்பேற்றதால் இச்சிக்கல் மேலும் அதிகரித்துள்ளது.

விடுதலைப் புலிகள் ஓர் அரசியல் அமைப்பினர் அல்லர்; அந்த அமைப்பினருடன் பேச்சு நடத்தும்போது பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுக்கள் அரசின் வசம் இருப்பது அவசியமாகும். இது தொடர்பாக அடுத்த வாரம் ஜனாதிபதியுடன் பேசவிருக்கிறேன்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்கள். அந்த யோசனை அரசின் யோசனை அல்ல. விடுதலைப் புலிகளின் யோசனை. இது குறித்து இரு கட்சிகளும் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

முதலில் புலிகளுக்கும் முஸ்லிம் தரப்புக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும். அதன் பின் தமிழ்மொழி பேசும் முஸ்லிம் மற்றும் தமிழ் தரப்புக்களுடன் இணக்கப்பாடு காணப்படவேண்டும்.

இந்த யோசனைக்கான இறுதித் தீர்வின்போது மூன்று விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். நாட்டின் ஒருமைப்பாடு, அபிவிருத்தி, ஜனநாயக முறையில் செயற்படல் ஆகிய மூன்று விடயங்களிலும் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (ம-3-164)

## பிரான்ஸ் போர்க் கப்பல் கொழும்பு துறைமுகத்தில்!

பிரான்ஸ் நாட்டு போர்க்கப்பலான 'மார்க்', நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. எதிர்வரும் 26ஆம் திகதி வரை இது கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும்.

உலகின் பாரிய போர்க் கப்பல்களில் ஒன்றாக விளங்கும் இது, இரண்டாவது தடவையாக இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கப்பலை பிரான்ஸ் கடற்படையின் இந்துசமுத்திரப் பிரிவினர் பயன்படுத்திவருகின்றனர். 13 கடற்படை அதிகாரிகள், 177 சிப்பந்திகள் இக்கப்பலில் பணியாற்றுகின்றனர். 158 மீற்றர் உயரமும், 22 மீற்றர் அகலமும், 18 தொன் எடையும் உள்ள இந்தக் கப்பலின் வருகை, இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்த சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதர் தெரிவித்தார்.

இந்தக் கப்பலின் வைஸ் அட்மிரல், இலங்கை கடற்படை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார். (ம)

### பரமேஸ்வரா சந்தியில் நேற்றிரவும் பதற்றம்

## மாவீரர் வளைவை படையினர் ட்ரக்கால் மோதி வீழ்த்தினர்!

யாழ்ப்பாணம்,நவ.23

பலாலி வீதியில் - பரமேஸ்வராச் சந்தியில் தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த மாவீரர் வளைவு தொடர்பாக ஏற்பட்ட முறுகல் நிலையால் நேற்றிரவும் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

இராணுவ டிரக் வண்டியில் வந்த படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் நேற்றிரவு 10.30 மணியளவில் உருவான முறுகல் நிலையைத் தொடர்ந்து டிரக்கால் மோதி அங்கு அமைக்கப்பட்டிருந்த வளைவு தகர்த்து வீழ்த்தப்பட்டது.

அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிலர் காயம் அடைந்ததாகக் கூறப்பட்டது. எனினும், படையினரின் துப்பாக்கி ஒன்று

(18ஆம் பக்கம் பார்க்க)

### மாணவர் பேரவை அலுவலகத்தில் சோதனை

யாழ்ப்பாணம்,நவ.23

பரமேஸ்வராச் சந்தியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்துக்குள் நேற்று நள்ளிரவு 1.30 மணியளவில் புகுந்த பெரும் எண்ணிக்கையான பொலீஸார் அங்கு

(18ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்தின நிகழ்வுகளை நடத்த எந்தவிதக் கட்டுப்பாடுகளுமில்லை

### இப்படிச் சொல்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு,நவ.23

யாழ். குடாநாட்டில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கவில்லை. அரசியல் நோக்கம் கொண்ட மாவீரர் தின நிகழ்வுகளை நடத்த படையினர் ஒத்துழைப்பு வழங்குவர் என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமித பெரேரா தெரிவித்தார்.

பி.பி.ஸி. தமிழோசைக்குத் தகவல் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவீரர் தின நிகழ்வுகள் அரசியல் நோக்கம் கொண்டவை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிபுரியும் விடுதலைப் புலிகளின் அந்தப்பணியுடன் இணைந்த அரசியல் நிகழ்ச்சிகளை அவர்கள் நடத்தலாம். அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# தன் அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்த முன்னர் அனைவருக்கும் புத்திவரவேண்டும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,நவ.23

அரசமைப்பில் தனக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைந்த அளவிலேயே இதுவரை தான் பயன்படுத்தியுள்ளார் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தன்னுடைய அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முன்னர் அனைவருக்கும் புத்திவரவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அதிபர்கள், ஆசிரியர்களைப் பாராட்டும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேல்மாகாணக் கல்வியமைச்சும் கல்வித்திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தப் பாராட்டு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு எனது தனிப்பட்ட விடயங்களைப் புறந்தள்ளி பிரதான அரசியல் கட்சிகள் இரண்டையும் இணைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

தற்போதைய அரசு கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை மட்டுப்படுத்தி வருகின்றது.



நான் அரசை ஒப்படைக்கும்போது 3 கோடி 50 லட்சம் டொலர் நிதி சேமிப்பில் இருந்தது. பாடசாலைக் கல்விக்காக பெற்றுக்கொண்ட 7 கோடி 20 லட்சம் டொலர் நிதியும், பல்கலைக்கழகக் கல்விக்காக பெற்றுக்கொண்ட 4 கோடி டொலர் நிதியும் இந்த அரசினால் இதுவரை வழங்கப்படவில்லை.

ஏன் இவ்வாறு நடக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. இது கல்வி அமைச்சின் தவறல்ல.

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, என்னால் நிதி அமைச்சுக்குள் புகுந்து இது குறித்து கேள்வி எழுப்பமுடியும். கேள்விக்கு பதிலளிக்காவிடின் என்ன செய்வது?

மிகவும் குறைந்த அளவிலேயே நான் இதுவரை அதிகாரங்களைப் பயன்படுத்தியுள்ளேன் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இதனைவிட மேலும் எனது அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அனைவருக்கும் புத்திவர வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

நாடு எதிர்நோக்கியுள்ள சிக்கல்களில் இருந்து மீளவேண்டும் என்பதற்காக நான் இதுவரை சில நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளேன்.

குறைந்தளவில் மீண்டும் ஒரு தடவை மரியாதை செலுத்தப்படவேண்டியவற்றிற்கு மரியாதை செலுத்தவும், கௌரவப்படுத்த வேண்டியவற்

(18ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் ஆறாவது வினாத்தாள் நாளைய உதயனில் வெளியாகவுள்ளது.

வினாத்தாள்களின் மேலதிக பிரதிகளைப் பெறவிரும்பும் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் வினாத்தாள் ஒன்றுக்கு 2 ரூபா வீதம் செலுத்தி 'அருண்ஸ் பிரிண்டேர்ஸ் அன் பப்ளிஷேர்ஸ்' நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## பாதுகாப்பு அமைச்சுக்கு ரூ.5,000 கோடி; மீள்குடியமர்வுக்கு ரூ.400 கோடி மட்டும்!

### ரவிராஜ் எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

கொழும்பு,நவ.23

பாதுகாப்பு அமைச்சுக்கு 5ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கும் அரசு வடக்கு - கிழக்கில் மீள்குடியமர்வுக்கு வெறும் 400 கோடி ரூபாவை மட்டுமே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான என்.ரவிராஜ் தெரிவித்தார். வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

### புத்திரசிகாமணிக்கு தமிழ்க் கூட்டமைப்பு நேரம் வழங்கியது

கொழும்பு,நவ.23

வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் இரா.புத்திரசிகாமணிக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு தமிழ்க் கூட்டமைப்பினர் நேரம் ஒதுக்கிக்கொடுத்துள்ளனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஈராக்கில் மீண்டும் தாக்குதல்கள்:

# 15 பேர் பலி! மேலும் பலர் படுகாயம்!!

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்துக்கு வடக்கே உள்ள நகரங்களான கான்பானி சட்டா மற்றும் பஹுபா ஆகியவற்றில் உள்ள பொலீஸ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். இதற்கிடையில், பக்தாத் விமான நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்த போக்குவரத்து விமானம் ஒன்றை இலக்குவைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், விமானம் பாதுகாப்பாக பக்தாத் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

பயணிகள் விமானம் ஒன்று இலக்குவைக்கப்பட்டிருப்பது ஈராக்கில் போர் ஏற்பட்ட பின்னர் இதுவே முதற்தடவை. தீவிரவாதிகள் பயணிகள் விமானங்களையும் இலக்குவைக்க ஆரம்பித்துள்ளதை அடுத்து ஈராக்கில் புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன.



குண்டுவெடிப்பில் காயமடைந்த ஒருவருக்கு மருத்துவமனையில் அவசர சிகிச்சை வழங்கப்படுகிறது.

### குண்டுவெடிப்புக்கள்

நேற்று பொலீஸ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் உள்ளூர் நேரப்படி காலை 8 மணிக்கு இடம்பெற்றன. ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாம் ஹுசைனுக்கு எதிரானவர்களின் கோட்டை எனக் கருதப்படும் பகுதியிலுள்ள பொலீஸ நிலையங்களே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

கான்பானி சட்டாவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் ஆறுபேர் பொலீஸார் மற்றைய மூவர் பொதுமக்கள்.

பொலீஸ் நிலையத்தில் கார்த் தரிப்பிடப் பகுதியிலேயே குண்டு வெடித்தது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

"ஒரு கார் மிகவேகமாக நிலையத்தை நோக்கி வந்தது. பொலீஸார் அதனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆனால், அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்று தலைமைப் பொலீஸ் அதிகாரி இஸ்மாயில் கானோ அல் அஸ்ஹாரி தெரிவித்தார்.

கட்டடத்தில் கார் மோதிய இடத்தில் பெரியதொரு துளை ஏற்பட்டிருப்பதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களால் உள்ளூர் வைத்தியசாலை நிரம்பிவழிந்தது. "நாங்கள் நிறையவே சடலங்களின பகுதிகளைப் பார்த்தோம் அதனால் எத்தனை உயிரிழப்புக்கள் என்பதை சரியாகச் சொல்ல முடியாது" என்றார் மருத்துவர் தலீத ஹுசைன் அல் தாமினி.

பக்தாத்துக்கு வடக்கே 15 கிலோ மீற்றர் தள்ளியுள்ள பஹுபா என்ற நகரில் இரண்டாவது கார்க்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. அங்கு ஆறு பேர் கொல்லப்பட்டனர். மேலும் டசின் கணக்கானவர்கள் காயமடைந்தனர். கான்பானி சட்டாவில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களால் பஹுபா வைத்தியசாலை நெருக்கடியில் சிக்கியிருந்தநிலையில் அங்கு இடம்பெற்ற குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்ட மேலும் பலர் வைத்தியசாலைக்கு வந்தவண்ணம் இருந்தனர். இதனால், வைத்தியசாலைப் பணியாளர்கள் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜோர்ஜிய நாடாளுமன்றம் நேற்று எதிர்க்கட்சியினரால் முற்றுகை!

### அதிபர் பாதுகாப்பாக வெளியேற்றம்

முன்னாள் சோவியத் நாடான ஜோர்ஜியாவில் அதிபர் எட்வேர்ட் ஷிவாஸ்நாக் பதவி விலகவேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

கடந்த ஒருவாரமாக ஆளும் தரப்புக்கு எதிராக நடந்துவந்த ஆர்ப்பாட்டங்களின் உச்சக்கட்டமாக எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்தில் நாட்டில இடம்பெற்ற தேர்தலில் அதிபரின் கட்சியும் கூட்டணியும் பெரும் மோசடிகளைச் செய்து வெற்றிபெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இதனால், அதிபரும் அரசும் பதவிவிலக வேண்டுமென அவை கோரிக்கை விடுத்துவருகின்றன.

எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்டதும் அதிபர் ஆயுதப் படையினரின் பாதுகாப்புடன் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

எதிர்க்கட்சியினரின் நேற்றைய ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் மிக்கையில் ஷகாஸ்விலி தலைமை தாங்கினார்.

புதிய நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து நேற்று அவர் உரையாற்ற முயன்ற சமயம் எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டதுடன் கட்டடத்தை உடைத்து உள்ளே நுழையவும் முயன்றனர்.

### நாய் இறைச்சிக்காக சிறுவன் விற்பனை

லண்டன்,நவ.23

வியட்னாமில் போதைப்பொருள் பாவனையாளர்கள் சிறுவன் ஒருவனைக் கடத்தி அவனை நாய் இறைச்சிக்காக விற்பனை செய்துள்ளனர் என்று அரச தகவல் அறிக்கை தெரிவித்தது.

ஹலோங் நகரில் உள்ள சந்தை ஒன்றில் அநாதையாகத் திரிந்த 13 வயது சிறுவனை சாக்கு ஒன்றினால் மூடிக் கட்டி கடத்திச் சென்ற அவர்கள், அவனை 3லட்சம் டொங் (வியட்னாமிய பணம் - 19 டொலர்) விலைக்கு உணவு விடுதி ஒன்றில் விற்றுவிட்டு நாய் இறைச்சி வாங்கிச் சென்றுள்ளனர்.

உணவு விடுதி உரிமையாளர்கள் அச்சிறுவனை விடுதலை செய்துள்ளனர். சம்பவம் குறித்து பொலீஸாரிடமும் தெரிவித்துள்ளனர்.

நாய் இறைச்சி உடல் வளர்ச்சிக்கு நல்லது என்று எண்ணுவதால் பெரும்பான்மையான வியட்நாமியர்கள் அதனை உண்கின்றனர். (ம)

### சமாதானம் குறித்து இஸ்ரேல் - பலஸ்தீன அதிகாரிகள் மீண்டும் பேச்சு

பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்திருப்பதாக பலஸ்தீன பிரதமர் அஹமட் குரேக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று வருடங்களாக தொடர்ந்துகொண்டிருக்கும் இரத்தக்களரி நிறைந்த வன்முறையை நிறுத்துவதற்கு வேண்டிய திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு அவர்கள் முயன்று கொண்டிருக்கின்றனர்.

ஐநாவின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட சமாதானத் திட்ட வழிகாட்டி வரைவு இஸ்ரேல் மற்றும் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் அங்கு மீண்டும் வன்முறைகள் தலைதூக்கின. தற்போது அதிகாரிகள் ஆரம்பித்துள்ள பேச்சுக்களின் விளைவாக டிசெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனும் பலஸ்தீன பிரதமர் அஹமட் குரேயும் நேரில் சந்தித்து பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக அரங்கில்

## தீவிரவாதத்தை அடியோடு ஒழிக்க அமெரிக்காவும் பிரிட்டனும் உறுதி

### எலிசபெத் மகாராணி கூறுகிறார்

லண்டன்,நவ.22

தீவிரவாதத்தை எதிர்க்கும் கொள்கையில் அமெரிக்காவும், பிரிட்டனும் உறுதியாகவுள்ளன என்று எலிசபெத் மகாராணி கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சந்தித்தது குறித்து செய்தியாளர்களுக்கு விளக்குகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே சிறப்பான நட்புறவு உள்ளது. ஈராக் பிரச்சினையில் இரு நாடுகளும் காட்டிய ஒற்றுமை பாராட்டத்தக்கது.

தீவிரவாதத்தை ஒழிப்பதில் அமெரிக்காவும், பிரிட்டனும் தொடர்ந்து பாடுபடும் இந்தக்கொள்கையிலிருந்து இரு நாடுகளும் விலகமாட்டா.

நியூயோர்க் உலக வர்த்தகமைய இரட்டைக்கோபுரம் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் செல்வாக்கு பன்மடங்கு உயர்ந்துள்ளது.

அதேபோல், ஈராக் பிரச்சினையில் பிரிட்டிஷ் காட்டிய ஆர்வம் பிரதமர் பிளேயரின் துணிவை வெளிக்காட்டியுள்ளது- என்று அவர் மேலும் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் தம்பதிக்கு பக்கிங்ஹாம் அரண்மனையில் விருந்து வழங்கியமை குறித்து அவர் பெருமிதம் தெரிவித்தார். இந்த விருந்துபசாரத்தில், அரச குடும்பத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்கள் பதின்மூன்று பேர், அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின் பவல், அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொன்டோலிசா ரைஸ் மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

#### யுத்தத்தால் அழிவடைந்த வடக்கு - கிழக்கின்

## மீள்கட்டுமாணம் தொடர்பாக பட்ஜெட்டில் ஏதும் இல்லை

### குற்றம் சுமத்துகிறார் சி.கா.செந்திவேல்

யுத்தத்தினால் அழிந்து போயுள்ள வடக்கு- கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு அரசு முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டத்தில் எதுவித திட்டங்களும் குறிப்பிடப்படவில்லை.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் அறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாடாளுமன்றத்தில் ஐ.தே.முன்னணி அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள 2004ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்களை ஏமாற்றி அவர்கள் மீது மேலும் சுமைகளை ஏற்றிக்கொள்ளும் ஒரு வரவு - செலவுத் திட்டமேயாகும்.

அதேவேளை, முதலாளிகளுக்கும் அவர்களது நிறுவனங்களுக்கும் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் வழிவகைகள் இதில் மிக நாசுக்காக கையாளப்பட்டிருக்கிறது. மேட்டுக் குடியினருக்கு சலுகைகளை வழங்கியிருக்கிறது. இந்த வரவு - செலவுத்திட்டத்தால் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பன குளிர்ச்சி பெற்று திருப்தி தெரிவித்துள்ளன.

எனவே, இந்த வரவு - செலவுத் திட்டம் முற்றிலும் முதலாளித்துவ மேட்டுக் குடியினருக்கான வரவு - செலவுத்திட்டமேயாகும். இத்தகைய வரவு - செலவுத்திட்டத்தில், உழைக்கும் மக்கள், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், வடக்கு-கிழக்கில் வாழ்விழந்து நிற்கும் மக்கள் எதிர்பார்த்த எதுவுமே இல்லை. இதன் மூலம் ஐ.தே.முன்னணி அரசு தனது முதலாளித்துவ சுயரூபத்தைத் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

குறைந்தது 2ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வை எதிர்பார்த்த அரச ஊழியர்களுக்கு ஆயிரத்து 250 ரூபா மட்டுமே கிடைத்துள்ளது. இது யானைப் பசிக்கு சோளப்பொரி வழங்கியது போன்றதாகும். இன்றைய வாழ்க்கைச் செலவை மட்டுமன்றி பல மடங்காக உயரப் போகும் அடுத்த வருட பொருள்களின் விலை ஏற்றங்களுக்கு இந்த சம்பள உயர்வு எந்தளவுக்கு ஈடுசெய்யப் போகிறது. இச்சம்பள உயர்வு கூடத் தனியார், கூட்டுறவுத் துறையினருக்கு வழங்கப்படல் வேண்டும் எனச் சிபாரிசு செய்யப்படவில்லை. தோட்டத் தொழில்துறையினருக்கு வழங்குமாறு வழமையான சிபாரிசு செய்வது போன்று அல்லாது வெறும் வேண்டுகோள் மட்டுமே விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அழிந்து போய்க் காணப்படும் வடக்கு - கிழக்கிற்கு வரவு - செலவுத் திட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை.

ஆயிரத்து 250 ரூபா சம்பள உயர்வு, விவசாயிகளுக்கு உரமானியம் ஒருவகைச் கண்துடைப்பாகும். அத்தியாவசியப் பொருள்களுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 10 வீதத்திலிருந்து 15 வீதமாக உயர்த்தப்பட்டதன் மூலம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயரப் போகின்றன. அதனால், ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் பாதிப்படைவர். அதேவேளை, ஆடம்பரப் பொருளகளுக்கான வரி 20 வீதத்திலிருந்து 15 வீதமாகக் குறைத்ததன் மூலம் முதலாளித்துவ மேட்டுக் குடியினருக்கான ஆடம்பர நுகர்வுப் பொருள்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் யுத்தமற்ற இன்றைய சூழலில் பாதுகாப்புச் செலவு குறைக்கப்படவில்லை. ஒட்டுமொத்தத்தில் இந்த வரவு-செலவுத்திட்டமானது மக்களை ஏமாற்றி கண்துடைப்புச் செய்யும் வழமையான முதலாளித்துவத்திற்கு பாதுகாப்பும், சலுகைகளும் வழங்கி நிற்கும் முதலாளித்துவ வரவு - செலவுத் திட்டமேயாகும் - என்று அதிலுள்ளது. (எ-8)

## ஒன்றுகூடி செபியுங்கள்

"ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழியில் நடப்போர் பேறுபெற்றோர்" (தி.பா 128:1)

குடும்பம் என்பது தாய், தந்தை, பிள்ளைகள் என்ற மூன்று கூறுகள் கலந்த கலவை. இங்கே அன்பு, புரிந்துணர்வு, மன்னிக்கும் மனப்பாங்கு எனும் நற்பண்புகள் மிளிர்கின்ற போது, நாம் குடும்பம் ஒரு கோவில், பல்கலைக்கழகம், பூந்தோட்டம், நாற்றுமேடை என்றெல்லாம் வர்ணிக்கின்றோம். புரிந்துணர்வு, மன்னிப்பு என்று இலகுவாகப் பேசிக்கொள்ள முடியும் ஆனால் நடைமுறையில் மிகவும் கடினமானவையே அநேகமான குடும்பங்களின் பிளவுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருப்பது புரிந்துணர்வின்மையே.

### ஞாயிறு நற்பிரசாதம்

ஆனால், ஆண்டவர் சொல்லுகிறார். 'தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர் மாறாக ஆண்டவருக்கு ஏற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள்' (எபே 6:4)

இவை ஒருபுறமிருக்க இன்னும் சில சம்பவங்களைக் கூறவிரும்புகிறேன்.

பிள்ளைகளே! எங்களைப் பார்த்தும் ஆண்டவர் சொல்லுகிறார். தந்தையருக்குக் காட்டும் பரிவு மறக்கப்படமாட்டாது. அது உன் பாவங்களுக்குக் கழுவாயாக அமையும். உன் துன்ப நாளில் கடவுள் உன்னை நினைவுகூர்வார்" (சீராக் 3:14)

'தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங்களை நிலைநாட்டும். தாயின சாபம் அவற்றை வேரோடு பெயர்த்தெறிந்து விடும்.' (சீராக் 3:9)

புரிந்துணர்வும், ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் ஆழமான ஆன்மீக அனுபவத்தின் வெளிப்பாடுகள். நீதிமான் எனப்பட்ட சூசை, மரியாள் மேல் சந்தேகம் கொண்டார். இருந்தும் அவரது ஆழமான ஆன்மீகம் ஐயத்தைப் போக்கி புரிதலை உண்டு பண்ணியது. உண்மையே 'சந்தேகம்தான் தீயை மூட்டும் நம்பிக்கைதான் தீபம் வைக்கும்' என்று பாடினான் ஒரு கவிஞன். தாய் தந்தையரே நீங்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கை தான் உங்கள் பிள்ளைகள் உங்கள் மீது வைக்கும் நம்பிக்கையின் அத்திவாரம். கூடிச்செபிக்கும் குடும்பம் கூடி வாழும் என்பர்கள். எனவே, ஒன்றாகச் செபியுங்கள். ஒன்றாக உணவருந்துங்கள் கூடியிருந்து கலந்துரையாடுங்கள். அப்போது அன்பும், புரிந்துணர்வும், மன்னிக்கும் மனப்பக்குவமும் தானாய் வளரும். உங்கள் குடும்பங்கள் கோவிலாக மாறும், பல்கலைக்கழகமாக மாறும், பூந்தோட்டமாகமாறும்.

- தேவராஜா ரவிராஜ்

### கௌரவிப்பு

நாவற்குழிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-75)

### ப.நோ.கூ.சங்க பொதுக்கூட்டம்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோயில் பர்வதவர்த்தனி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (ஐ)

| | | | |
|---|---|---|---|
| | ரா. | | சனி |
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | ▲ பு. வெ. சூ. | கே. சந். | |

# இந்த வார இராசி பலன்

## 23.11.2003 - 29.11.2003

### மாற்றம்:

23-11-2003 இல் விசாகம், துலாம், சந்திரன் நிற்கும்
24-11-2003 இல் தனுவில் வெள்ளி மாறும்
26-11-2003 இல் தனுவில் புதன்மாறும்.
28-11-2003 மீனத்தில் செவ்வாய் மாறும்.

மெல்ல மெல்ல பாயும், வெள்ளம் கல்லையும் உருட்டிப் பாயும் அரசியலில் இன்றைய நிலை இது வாகும். உலக நாடுகளின் அழுத்தங்கள் மேலிடும். தெற்கில், கிழக்கில் அரசியல்வாதிகள் பேதப்படுவர். திட்டமிட்ட அழிவுகள் தொடரும். ஆயுதப் படையினர் உஷார்படுத்தப்படுவர். குடும்பக் குழப்பம், நாட்டுக் குழப்பங்கள் ஏன் வருகின்றன? நெருக்கடிகளை உருவாக்குபவர்கள் இலாபங்கருதிப் பேதங்களைத் தூண்டிவிட இடமுண்டு. இந்தியா, அரசிடம் சில நிபந்தனைகளை செயற்படுத்தும்படி அழுத்தம் கொடுக்க இடமுண்டு. இந்தியாவில் தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு அதிகரிக்கும். வடக்கில் சோனியா காந்திக்கு செல்வாக்கு அதிகரித்தாலும் அரசை விழுத்தும் அளவு மேலிடாது. மத்திய கிழக்கில் திட்டமிட்ட அழிவுகள் அமெரிக்க, பிரிட்டன் படைகள் செயற்படுத்தும். தொடர்ந்தும் வன்முறைகள் அதிகரிக்கும். அரபிக் கடல், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தம் அமுக்கநிலை கூடி. மழை வீழ்ச்சி அதிகரித்து வெள்ளப் பெருக்குகள் அழிவுகள் நடக்க இடமுண்டு. பசுபிக் சமுத்திரத்திலும் விட்டுவிட்டு காற்றமுக்கம் ஏற்பட்டு சில இடங்களில் அழிவுகள் நடைபெறலாம் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

பொருள் வந்து செலவாகும். தொழில் ஸ்தானத்தில் வரவேற்பு அடிக்கடி ஏற்படும். விதண்டாவாதத்தால் பகை உணர்ச்சி நண்பர்களுடன் மேலீடும். சிலர் தீமை செய்வர். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். புதிய புடைவை வரும். குடும்பத்தினருக்கு நன்மைகள் அதிகரிக்கும். தூரத்துச் செய்திகள் நன்மை தராது. கைகால் விறைப்பு, சளித் தொல்லை வரும் பாதுகாப்புத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### இடபம்

தொழில் ஸ்தானத்தில் கருத்துவேற்றுமை. சூரியனும், புதனும், வெள்ளியும் சேர்ந்து 7 இல் இருப்பது ஒருயோகமாகும். திடீர் மாற்றங்கள் கொடுக்கும். பொருள் வரவு, நண்பர்கள் உதவி மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பு - என்பன கொடுக்கும். வீடுமனைச் சிறப்பு, வாகனச் சிறப்பு என்பன கொடுக்கும். பொருள் ஒன்று தவற இடமுண்டு. குருத்துறை, வைத்தியத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### மிதுனம்

உதயத்தில் சனி நிற்கின்றது. அடிக்கடி பிரச்சினைகள் வந்து போகும். சிலர் வீண் பழி சுமத்துவார்கள் வரவுக்கு மீறிய செலவுகள். காரியங்கள் தாமதாகும். அயலவர்களும் சகோதரர்களும் உதவிகள் செய்வார்கள். பொருள் வரவு மந்தமாகும். இடமாற்றங்கள் சிலருக்குக் கொடுக்கும். புதிய நண்பர்கள் வந்து சேருவர். புதிய திட்டங்கள் நன்மை தரும். விறைப்பு, பலவீனம் கொடுக்கும். தர்மசிந்தனை மேலிடும் சளித்தொல்லை, வாய்வுத் தொல்லை கொடுக்கும் வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: வெள்ளி, சனி (மத்தியானம்)*

### கடகம்

தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். நண்பர்கள் மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். இடமாற்றம் சிலருக்கு நன்மைகள் கொடுக்கும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். தூரத்துச் செய்திகள் நன்மை, மகிழ்ச்சி தரும். அடிக்கடி மனமாற்றம் கொடுக்கும். குடும்பத்தில் எதிர்பாலாருக்கு உடல்நிலை பாதிப்பு கொடுக்கும். குருத் தொழில், பிரயாணத்துறைகளைச் சார்ந்தவர்களுக்கு தொழில் நிலையில் புதிய இலாபங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி*

### சிங்கம்

உதயத்தில் குரு நிற்பதனால பிறருக்கு உதவி செய்தல், ஆலோசனை கூறுவதனால் நன்மை சொல்லுவார்கள். அயலவர் மட்டும் விண்பழி சுமத்துவர். முழங்கால் விறைப்பு கொடுக்கும். மேலதிகாரிகளுடன் தொழில் ஸ்தானத்தில் புகைச்சல் ஏற்பட இடமுண்டு. வீடு, வாகன யோகம் வரும். அரச உதவிகள் வரத் திட்டமிடுவீர்கள். குருத்துறை, வைத்தியத்துறைகளைச் சாந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி*

### கன்னி

சனீஸ்வரன் பத்தாமிடத்தில் நிற்பதனால் தொழில் ஸ்தானத்தில் மற்றவர்களுக்காக உதவிக்குச் சென்று உபத்திரவப் படுவீர்கள். குடும்பத்தில் நன்மை நடக்கும். பெற்றோர் வழிச் சகோதரர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். அயலவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்யாதீர்கள். வீண் பகை வந்து சேரும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். களவு போகலாம். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யவும். விவசாயிகள், வியாபாரிகளுக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி*

### துலாம்

எமது விடாத முயற்சியால் தான் எந்தக் காரியங்களிலும் வெற்றிவரும். புதிய திட்டங்களில் வெற்றி அடைவீர்கள். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் மேலிடும். பொருள் செலவுகள் கட்டுமீறும். வீடு, வாகன வசதிகள் வர இடமுண்டு. தூரப்பிரயாணங்களைத் தவிர்க்கவும். குருத்துறை, அரசியல்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி*

### விருச்சிகம்

இறைவனின் திருவருள் தானாக வர நாம் ஒழுங்கான வேண்டுதல் களைச் செய்துவர வேண்டும். ஆலய வழிபாடு. தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகி வரும். அயலவர்கள் குறைகூறித்திரிவர். பிரயா ணங்களைத் தவிர்க்கவும். விறைப்பு, சலவருத்தம், சளி வருத்தம் என்பன வரும். இரும்புத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு மாற்றங்களுக்கும் முன்னேற்றங்களும் கொடுக்கும் மாமி, மாமா, சிறிய தந்தை வழியினர்கள் வரவு இருக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி, சனி.*

### தனுசு

மனம் அங்கே, உடம்பு இங்கே என்ற நிலை உங்களுக்கு. பாசத்தில் துடிப்புவரும். ஆனால், வசதி இருக்காது. பிரயாணங்களில் நிதானம் - வழுக்கி விழ இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் உதவிகள், மேலதிகாரிகள் உதவி தருவர். கொடுத்தது வராது - வீட்டில் தேவைகள் அதிகரிக்கும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும், கால் வருத்தம், சளி வருத்தம் வரும். குருத்துறையினர் - கணனித்துறை அச்சுயந்திரத்துறை - மருந்துத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### மகரம்

விதி வசப்பட்ட பலன்கள் நடக்கும். அடிக்கடி கோபம் வரும். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி பிரச்சினைகள் வர இடமுண்டு. தூரத்து உறவினர் வரவோ, செய்தி கிடைக்கவோ இடமுண்டு. வாய்வுத் தொல்லை - கைகால் விறைப்பு - தலைப்பாரம், சளி வரலாம். புதிய பொறுப்புக்களை கண்டபடி எடுக்காதிர்கள். குருத்தொழில், கடல் தொழில், பிரயாணத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். பிரயாணத்தை தவிர்க்கவும். புதிய மாற்றம் ஒன்றுக்கு திட்டமிட ஆலோசனை பெறுவீர்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### கும்பம்

கலகலப்பாக இருக்க முயலுங்கள். வந்த நாங்கள் கொண்டு வரவில்லை. ஆனால், இருக்கும் வரையும் வாழவேண்டுமே. தேவைகள் அதிகம். சமாளிக்கவும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பு இருக்கும் - பணவரவு இருக்கும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். வீடு, வாகன வசதிகள் நன்மை தரும். சகோதரங்களுக்கு உடல் நிலை பாதிப்பு வர இடமுண்டு. கால்வருத்தம், சளி, வயிற்றில் நோ என்பன வர இடமுண்டு. குருத்தொழில், வாகனத் தொழில், அரசியல்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.*

### மீனம்

காலத்திற்குக் காலம் மாற்றங்கள் போல உங்கள் மனங்களிலும் மாற்றங்கள் அடிக்கடி வரும். இடமாற்றங்கள் சகஜம். சனீஸ்வரன் பார்வையால் தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி பிரச்சினைகள் வர இடமுண்டு. அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உதவிகள் செய்து தருவார்கள். தொழில் நிலைப்பாட்டில் லீவுகள் எடுக்காமல் கவனமாக இருக்கவும், கண்பார்வை சோதனை செய்யவும். வியாபாரிகள், குருத்தொழில் தொடர்பானவர்கள் நல்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**



55ஆவது படையணி தளபதியின் வழிகாட்டலுக்கமைய 554 ஆவது படையணியின் ஏற்பாட்டில் கெற்பேலி கிராமத்தில் பனம் விதைகள் நடப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள். அங்கு படையினர் உணவுப் பொதிகளையும் வழங்கினர்.

# பனை வள அபிவிருத்திக்கு படையினர் ஒத்துழைப்பர்

## பலாலி தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கப்பட்ட பனை மரங்களுக்குப் பதிலீடாக பனை விதைகளை நட்டு பனை வளத்தை அபிவிருத்தி செய்யும் பணிக்கு படையினர் முழு ஒத்துழைப்பு வழங்கவுள்ளனர் என்று பலாலியில் உள்ள யாழ். பாதுகாப்பு படைத்தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக படைத் தலைமையக கட்டளை அதிகாரி செய்தி அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக வடக்கு - கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக யாழ்.மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய பனை உற்பத்தி சேதமடைந்தது. இதனால் பனையினால் பயனைப்பெற்று வந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

இதனால் யாழ்ப்பாணத்தில் பனை அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு வசதியாக பாரிய அளவில் பனை நடுதல் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி 2003.11.20ஆம் திகதி 55ஆவது படையணி தளபதியின் வழிகாட்டலுக்கமைய 554ஆவது படையணியினால் கெற்பேலி கிராம மக்களுக்கு பனைவிதைகள் வழங் கப்பட்டன. அதே தினத்தில் படையினரும் அப்பகுதியில் பனை நடுகைத் திட்டங்களை ஆரம்பித்து பெரும் எண்ணிக்கையான பனம விதைகளை நட்டுள்ளனர். மேலும் பனம விதைகளை பெற்றுக்கொள்ள சமுகமளித்திருந்த மக்களுக்கு தேநீர் விருந்துபசாரம் செய்த படையினர், அவர்களுக்கு மதியபோசனத்தையும் வழங்கியுள்ளனர். அது மட்டுமல்லாது அப்பிரதேச மக்களின் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




நோயற்ற எதிர்காலச் சமுதாயம் படைத்திட...
அரும்புகளுக்கு உதவுவீர்!

கணக்கு இல: 5-21-2022 431-4 (இலங்கை வங்கி, மேற்றரக்கிளை)

"அடுத்தவன் வலி, அடுத்தவன் பசி, அடுத்தவன் தவிப்பு
எப்போது உன்னுடையதாய் உனக்குள்
வேதனையைக் கிளப்புகிறதோ
அப்போதே நீ மனிதப் பிறவி"

- சத்ய சாயி பாபா -

வசதி குறைந்த சிறுவர்களின் மேலதிக சிகிச்சைக்கு உதவுங்கள்.

அரும்புகள் சிறுவர் நிதியம்

யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம்

021-222-2134
:0777-678051

## சித்த மருத்துவ மாணவர்களின்
# கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடல் நாளை (24.11.2003) திங்கட்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(24970) (2515-18) *சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்.*



## படிவம்

இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2003 விண்ணப்பப்படிவம் விற்பனைக்கு உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி: 31-12-2003

BHARATHI PHTHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
T.PHONE: 094 - 021 -2223081



# புதிய கற்கைநெறிகள் ஆரம்பம்

ஒவ்வொன்றும் வீட்டிலிருந்து இலகுவாக கற்கக்கூடியதான தமிழ் மூலமான புத்தகங்களைக் கொண்ட பாடநெறிகள்.

## DIPLOMA IN SINHALA LANGUAGE
## DIPLOMA IN GERMAN LANGUAGE

காலம்: 6 மாதம், ஒரு பாடநெறிக்கான மொத்தக் கட்டணம்: ரூபா 1000/= . பாடநெறிகளின் முடிவில் பரீட்சையும் DIPLOMA சான்றிதழும் உண்டு. தெரிவு செய்யும் பாடநெறி/பாடநெறிக்கான தொகையின் காசுக்கட்டளையை 'PSALMS TECHNOLOGIES' என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவேண்டிய முகவரி:

Department of Foreign Languages,
Psalm Institute of Engineering and Technology
22 - 1/3, Galle Road, Dehiwala. (C/31087) (30-21-15-11)



## இதோ!

*சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!* தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் 'நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

*சித்தாரா* **பனங் கற்கண்டு** இருமல் பாணி

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-29245)


# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி ரோகினி
## சிவசுப்பிரமணியம் (பபி)

மலர்வு 09.07.1973 — உதிர்வு 02.12.1994

**திதி: அமாவாசை**

இங்கிதமாய் இளவேனிலென
இசை மீட்டி வந்த இளையநிலவே!
கங்குல் என இருள் நீக்கி
கனிவுடனே இனியமொழி
பேசிநின்றாய் இனியவளே!
மங்களமாய் நீயிருப்பாய் – என
நாம் நினைக்க இருபத்தியொன்றோடு
மறைந்து சென்றாய்! – இன்றொடு
ஒன்பது ஆண்டுகள் நிறைந்ததுவே!
என்றும் உன் நினைவு – எம் நெஞ்சத்தில்
பல்லாண்டுகள் நிறைந்திருக்கும்!

-குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தற்காலிக முகவரி:
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(24931) Uthayan Graphics

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச ஸ்தாபகரும் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமாகிய*

**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**

அவர்களையும் அவரின் சேவையினையும் இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

**சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,**
**கோப்பாய் பிராந்தியம்.**

(35-18-15-21) (C/31427)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## முருகேசு இரத்தினம் (இணுவில்)

தோற்றம் 20.05.1925 — மறைவு 14.12.2001

**திதி : கார்த்திகை அமாவாசை**

ஆண்டுகள் இரண்டாகி விட்டும்
ஆறவில்லை எம் துயரம் அப்பா!
நீண்ட தூரம் நீங்கள் சென்றுவிட்டாலும்
எம் மனதில் உங்கள் நினைவுகள்
என்றும் மாறாது.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(24934) Uthayan Graphics

இணுவில் மேற்கு, கந்தசாமி கோவிலடி.

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 10 - 1927



மறைவு 23 - 11 - 1990

அமரர்
## சண்முகம் ஞானப்பிரகாசம்

*(யாழ். மா. சி. க. கூ. ச. சமாசத்தின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவரும்)*

சமாசத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் ச.ஞானப்பிரகாசம் அவர்களை அன்னார் மறைந்து 13 ஆவது ஆண்டில் இன்று நினைவு கூருகிறோம்.

*யாழ். மாவட்ட*
*சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்*
*சங்கங்களின் சமாசம்.*

*இல. 637 (383),*
*கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-31428) (25-15-18-21)

# மரண அறிவித்தல்

## திருமதி லூசி சின்னத்தம்பி

உடுவிலைச் சேர்ந்த திருமதி லூசி சின்னத்தம்பி அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற V.K.சின்னத்தம்பியின் (அரச கட்டட ஒப்பந்தகாரர்) அன்பு மனைவியும் பா.செல்வநாயகி, செல்வநாயகம் (அரச கட்டட ஒப்பந்தகாரர்), செல்வசீலன்("அலோமாஸ் உரிமையாளர், சுன்னாகம்), வ.செல்வரஞ்சினி (கனடா), செல்வரஞ்சன் (ரஞ்சன்), காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாலசுப்பிரமணியம் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), போ.வரோதயன் (கனடா), சந்திரராணி, சாந்தகுமாரி, கமலாதேவி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜீவராசா, கிரிதேவ், தேவதர்சினி, அனுசீலா, ராகவேந்தன், அலோமா, அகிலன், அஷான், டேவிட்பிரகாஷ், பிரபா, கரன், செல்வி, ஆரண்யா, ஜிதூஸ்மன், திவித்தா, கோபிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்சிகனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (23.11.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

*"செல்வ வாசா" உடுவில்.* (24960) (35-11-15-21)

உதயன்

# மகேஸ்வர மகிமை!

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அரசியல் சகவாழ்வு நெறிமுறை பிரச்சினைக்கு உள்ளாகி, அரசியல் நெருக்கடி உருவாகி, நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். பொதுத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படலாம் என்ற ஊகங்கள் கிளம்பியபோதே இத்தகைய வாய்ச்சவடால் பரபரப்புகள் எதிர்பார்க்கப்பட்டவைதான். அவற்றை அரங்கேற்றுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதற்காகக் காலதாமதமாகியிருக்கின்றது. அவ்வளவே.

வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் புனரமைப்புக்குப் பொறுப்பாக ஒரு தமிழரை நியமிக்கவில்லை. அமைச்சரவையில் இலங்கைத் தமிழர் ஒருவருக்குக்கூட இடமளிக்கவில்லை. - என்று அமைச்சர் மகேஸ்வரனின் குற்றச்சாட்டில் கூறப்பட்ட விடயங்கள் எவையும் புதியவை அல்ல. 2001 டிசெம்பர் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அமைச்சரவையை அமைத்தபோதே இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்டுவிட்ட அநீதிகள் அவை.

அப்போது அவற்றையெல்லாம் தாம் ஏற்றுக்கொண்டு அங்கீகரித்ததால்தான் பிரதமர் ரணிலின் அரசில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரேயொரு இலங்கைத் தமிழரான தமக்கு, 'பிச்சை' போடுவதுபோல பிரதமர் ரணில் வழங்கிய அரைகுறை அமைச்சுப் பதவியை மகேஸ்வரன் ஏற்றுக்கொண்டார்.

அந்த அமைச்சுப் பதவியையேற்றுக் கொண்டால்தான் இந்து கலாசார அமைச்சு என்ற உயர்வுமிக்க மத அமைச்சின் கீழ் சாராயம் உற்பத்தி செய்யும் திக்கம் வடிசாலையையும் மீன் பிடித்தலோடு தொடர்புடைய வடகடல் நிறுவனத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பை அவர் மேற்கொள்ள முடிந்தது.

அமைச்சுக்கள் ஒதுக்கப்பட்ட சமயத்திலேயே - அப்போதே - இலங்கைத் தமிழருக்கு வேண்டுமென்றே அநீதி இழைக்கப்பட்டமை அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இதுவரை காலமும் பல தடவைகள் இப்பத்தியிலும் திருப்பித் திருப்பி அது சுட்டிக்காட்டப்பட்டும் வந்துள்ளது.

ஆனால், அமைச்சர் மகேஸ்வரன் அவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை. 'அமைச்சர் பதவி' என்ற பந்தாவை - அது அரைகுறை அமைச்சர் பதவி என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் - பாய்ந்து பிடித்துக்கொண்டார். இப்போது இரண்டு வருடம் கழித்து தேர்தல் மேகங்கள் சூழத் தொடங்கியதும் - அடுத்த தேர்தலில் தமது பிரதேசத்தில் ஆளும் தரப்புடன் இணைந்து போட்டியிடுவதற்கான சூழ்நிலை, வாய்ப்பு குன்றி வருவதை உணர்ந்ததும் - ஆளும் தரப்பை உதறுவது போன்று புதுக்கதை, புருடா விடுகின்றார் அவர் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அவர் இப்படித் திறந்த சோடாப் புட்டிபோல சீறி எழுவதும், அதே வேகத்தில் அடங்கிப் போவதும், அவரது இந்த இரண்டு, மூன்று வருட கால அரசியல் செயற்பாட்டில் ஒன்றும் புதுமையான விடயங்கள் அல்ல.

நாடாளுமன்றத்தில் அதிர்வேட்டுக்களை முழங்குவதும், அரச நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் அதிரடிப் பாய்ச்சல்களை நடத்துவதும், திடீரெனப் போய் எதிர்த் தரப்பில் உள்ள ஜனாதிபதியைச் சந்தித்து, அவருடன் புகைப்படத்துக்கு 'போஸ்' கொடுத்து, பின்னர் ஊடகங்களில் அவரை வானளாவப் புகழ்ந்து தனது கட்சித் தலைமையின் வயிற்றில் புளியைக் கரைப்பதும், இவ்வளவும் செய்துவிட்டு பின்னர் அரசுத் தலைமை சுண்டி எறியும் சலுகைகளை சுவீகரித்தும் அடங்கிப் போவதும் ஒன்றும் புதிய விடயங்கள் அல்ல.

கடைசியாக அவரது அமைச்சுக்குப் பிரதமர் ஒதுக்கிய பத்துக்கோடி ரூபாவோடு அடங்கிப்போயிருந்த அவர் அது முடிந்ததும் இப்போது திரும்பவும் திறந்த சோடாப் போத்தலாகியிருக்கின்றார்.

ஆனால், அவர் எழுப்பிய குற்றச்சாட்டுக்கள், சுட்டிக்காட்டிய விடயங்கள் எவையும் மறுக்கத்தக்கவையல்ல. முற்றும் முழுதும் சரியானவை. ஒவ்வொரு இலங்கைத் தமிழனினதும் மனதில் உள்ளதையே அவர் பிரதிபலித்திருக்கின்றார். ஆனால், அவற்றைப் பிரதிபலிப்பவரும், பிரதிபலிக்கும் நேரமும், முறையும்தான் கொஞ்சம் இடிக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதேசமயம் சிறுபான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் - அதுவும் அமைச்சர் நிலையில் இருப்பவர் ஒருவர் - தமக்குச் சரியெனப்பட்டதை நாடாளுமன்றத்தில் தெரிவிப்பதற்கு அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டதும், கேவலமாக நடத்தப்பட்டதும், அச்சுறுத்தப்பட்டதும் சகிக்கமுடியாதவை; ஏற்றுக்கொள்ளமுடியாதவை. அது தனி அமைச்சர் மகேஸ்வரனுக்குச் செய்யப்பட்ட அநீதி அல்ல. முழுத் தமிழினத்துக்குமே இழைக்கப்பட்ட அநீதி; உரிமை மீறல். இத்தகைய சவாலை அமைச்சர் மகேஸ்வரனுடன் சேர்ந்து எதிர்கொண்டு, முகங்கொடுத்துப் போராடி, தாங்கள் உரிமையை நிலைநாட்ட முழுத் தமிழ் எம்.பிக்களும் மற்றும் சிறுபான்மையின எம்.பிக்களும் மக்களும் தயாராக வேண்டும். இது விடயத்தில் அன்றையதினம் உத்வேகத்தோடு நாடாளுமன்றத்தில் நடந்துகொண்ட தமிழ் எம்.பிக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தான் சார்ந்த அரசின் மீது தாமே குற்றச்சாட்டுக்களை அடுக்கி, அதற்கு சரியான முடிவை எடுப்பதற்குத் தாமே காலக்கெடுவையும் விதித்திருக்கும் அமைச்சர் மகேஸ்வரன் காலக்கெடு முடிவில் என்ன செய்வார்?

அரசியல் நெருக்கடி நிலவும் இச்சூழ்நிலையில் அரசியல் குழப்பங்கள் மேலும் இறுகி, தேர்தல் மேகங்கள் மேலும் சூழுமானால் அவரது முடிவு இதுதான் என்பதை இப்போதே அறுதியிட்டுக் கூறிவிட முடியும். இல்லையேல் பழைய குருடி கதவைத் திறவடி என்ற பல்லவியே மீண்டும் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

பண்டிதமணி நினைவாக வழங்கும்

# சம்பந்தர் விருது - 2002 சு.வேயின் 'பாற்காவடி'க்கு

யாழ்ப்பாணம்,நவ.23

2002ஆம் ஆண்டுக்கான சம்பந்தர் விருது மூத்த படைப்பாளி சு.வேலுப்பிள்ளை (சு.வே)யின் சிறுகதைத் தொகுதியான 'பாற்காவடி' என்ற நூலிற்கு வழங்கப்படுகிறது.

இலக்கியக்கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக ஈழத்தின் முன்னோடிச் சிறுகதைப் படைப்பாளி சம்பந்தரின் பெயரால் வருடாவருடம் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு எழுத்தாளர் சு.வே.இவ்விருதினை பெறுகின்றார். ஈழத்தின் புகழ்பூத்த படைப்பாளிகளில் சு.வே முக்கியமானவர். 1949 களில் இலக்கியத்துறையில் கால்களைப் பதித்தவர். ஈழகேசரிப்பண்ணையில் உருவாகியவர்.

மண்வாசனை, பாற்காவடி என்பன அவரது சிறுகதைத் தொகுதிகளாகும். பண்டிதராயினும் புத்திலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடும் பயிற்சியும் கொண்டவர். சிறந்த ஆய்வாளர். பாற்காவடி, வத்தகைப்பழம், மண்வாசனை என்பன அன்னாரின் சிறந்த படைப்புகள்.

தேசிய இலக்கியம், மண்வாசனை யதார்த்தம் என்ற கோசங்கள் எழுவதற்கு முன்னரே தன்படைப்புகளில் அவற்றினைப் பதியவைத்தவர். பவளவிழா வயதினைக்கடந்தவர். அவரது இலக்கியபணிகளைப் பாராட்டி இவ்வாண்டிற்கான சம்பந்தர் விருது அன்னாரின் பாற்காவடி என்ற தொகுதிக்கு வழங்கப்படுகின்றது.

எழுத்தாளர் சம்பந்தனின் மகள் அவ்விருதுக்கான பணப்பரிசில் பத்தாயிரம் ரூபாவை வழங்கிவருகிறார். விரைவில் நடைபெறவிருக்கும் விழாவில் இப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படும்.

இதுவரை இந்த விருது பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன், தெளிவத்தை ஜோசெப், பேராசிரியர் எஸ்.பத்மநாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. (எ-4)

## காலத்தின் பதிவு



ஏதுவும் எம்மால் முடியும்.... படம் : சி..

# 'எய்ட்ஸ்' பரிசோதனை வசதிகள் உடன் ஏற்படுத்தப்பட வேண்டும்

## விழிப்புணர்வு இணைப்பாளர் தெரிவிப்பு

குடாநாட்டில் 'எயட்ஸ்' நோய் தொடர்பான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு உரிய வசதிகள் இல்லை.

தற்போது இங்கு 'எய்ட்ஸ்' நோயின் பரம்பல் குறிப்பிடும்படியாக இருப்பதால் அது தொடர்பான பரிசோதனையை சிறந்த முறையில் மேற்கொள்ளக்கூடிய மருத்துவ வசதிகள் செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும்.

குடாநாட்டில் மேற்படி நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் விழிப்புணர்வுப் பிரிவின் இணைப்பாளர் சேரன் செங்குட்டுவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் எய்ட்ஸ் நோயின் பரம்பல் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக யாழ். கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் வெளிநாடுகளிலிருந்து பெருமளவானோர் குடாநாட்டுக்கு வந்துள்ளனர்.

- இவ்வாறு வருபவர்களுக்கு மட்டுமன்றி, இங்கிருப்பவர்களுக்கும் 'எய்ட்ஸ்' பரிசோதனையை உரிய முறையில் மேற்கொள்வதற்குரிய மருத்துவ வசதிகள் இங்கு இல்லை.

அத்துடன், குடாநாட்டு மக்கள் மத்தியில் 'எய்ட்ஸ்' நோய் குறித்தும் அதன் தாக்கங்கள் குறித்தும் பூரணமான அறிவு இல்லை.

இதனால், இனிவரும் காலங்களில் இந்நோயின் பரம்பல் மேலும் பன்மடங்காக அதிகரிக்கக்கூடிய சாத்தியங்களும் உள என. தற்போது 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் குடாநாட்டில் எய்ட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் இதுவரை 24பேர் 'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்களில் 16 பேர் உயிரிழந்துவிட்டனர். எனினும், சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் எய்ட்ஸ் நோயின் தாக்கத்துக்கு இலக்காகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

குடாநாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலீஸார் மற்றும் படையினர் மத்தியிலும் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

# சத்திய சாயி அவதார நிகழ்வு

மானிப்பாய்,நவ.23

பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 78ஆவது அவதாரதின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு மானிப்பாய் சோதி வேம்படி வீதியில் உள்ள 'சாயி லக்ஷ்மி' மண்டபத்தில் நடைபெறும்.

சத்திய சாயி சேவா நிலையத்தின் வடபிராந்திய இணைப்புக்குழுத்தலைவர் இரா.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் சத்தியசாயி மனித மேம்பாட்டு வித்தியாலய மாணவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளன.(எ-8-90)

# மழையால் கடும் பாதிப்புக்குள்ளான வீடுகளின் விவரங்கள் சேகரிப்பு

வலி.மேற்கு,நவ.23

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாகக் கடும் பாதிப்புக்குள்ளான வீடுகள் மற்றும் கட்டடங்கள் பற்றிய விவரங்கள் வலி.மேற்கு பிரதேச செயலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸின் பணிப்புரையின் பிரகாரம் இந்த சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது.

மழையால் குடியிருக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை அவற்றின் சேதநிலை, மேற்கொள்ளப்படவேண்டிய வேலை, தேவையான நிதி போன்ற விவரங்கள் கிராம அலுவலர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை - அராலி மேற்கில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பிரதேச செயலர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், உடனடியாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துடன் தொடர்புகொண்டு 10 வீடுகளுக்குக் கூரைத்தகடுகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

பிரதேச செயலருடன் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கேதீஸ்வரராஜா, அபிவிருத்தி இணைப்பாளர் பா.இரவீந்திரன் ஆகியோரும் மழையினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிட்டனர்.

(எ-10-175)

## நாளை

கார்த்திகை 08
திங்கட்கிழமை
(24. 11.2003)
திதி : பிரதமை
பின்னிரவு 2.57 வரை
நட்சத்திரம்: அனுசம்
முன்னிரவு 9.16 வரை
சுபநேரம்: 12.11-1.41
ராகுகாலம்: 7.41 - 9.11
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உன் கண்கள்தான் உன் உடலுக்கு விளக்குகள்.

# நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து 9 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.23

இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற திட்டத்திற்கமைய நல்லூர் பிரதேச செயலகத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றிவரும் 9 உத்தியோகத்தர்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து வேறு பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொது எழுதுவினைஞர்களான செல்வி பி.சிவனேஸ்வரி, திருமதி ரி.வாமதேவி ஆகியோர் உடுவில் பிரதேச செயலகத்திற்கும் - பொது எழுதுவினைஞர் திருமதி எஸ்.தவயோகேஸ்வரி வேலணை பிரதேச செயலகத்திற்கும், எழுதுவினைஞர் திருமதி எஸ்.இன்பவதி யாழ். மாவட்ட செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எழுதுவினைஞர்களான திருமதி எஸ்.வரதலட்சுமியம்மா யாழ். பிரதேச செயலகத்திற்கும், திருமதி கே.காந்திமதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கும் எஸ்.செல்வராஜா காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனைக்கும் - எழுதுவினைஞர் திருமதி ஏ.யோகராணி தட்டெழுத்தாளர் திருமதி கே.இந்திராணி ஆகியோர் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (எ 6)

# சட்டவிரோத மின் இணைப்பு கரவெட்டியில் 7பேர் சிக்கினர்

## தலா 5 ஆயிரம் ரூபா அபராதம்

வடமராட்சி,நவ.23

கரவெட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 7 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவர்களிடமிருந்து மின்சாரம் பெறுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

கரவெட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்படுவதாக இலங்கை மின்சார சபையின் பருத்தித்துறை அலுவலகத்துக்கு அப்பகுதி மக்களால் புகார் செய்யப்பட்டிருந்தது.

மின்சாரசபை உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் நெல்லியடிப் பொலீஸாருடன் இணைந்து கடந்த திங்கட்கிழமை இரவு திடீர்சோதனை ஒன்றை நடத்தினர்.

இதன் போது கரவெட்டிப் பகுதியிலுள்ள புராய்பொறுக்கி, மண்டான், செல்வாபுரம் ஆகிய இடங்களில் வீடுகளுக்குச் சட்டவிரோதமாக மின் இணைப்பைப் பெற்றிருந்த 7 பேர் அகப்பட்டுக்கொண்டனர்.

நெல்லியடிப் பொலீஸார் 7 பேரையும் பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட 7 பேருக்கும் தலா 5 ஆயிரம் அபாரதம் விதித்த நீதிவான் அவர்களை கடுமையாக எச்சரிக்கையும் செய்தார். (எ-173)

மக்கள் வங்கி



அண்ணனுக்கு
உதவி செய்ய ஆசை

ஆனால் வங்கியோ ரொம்பத் தொலைவில்...

அண்ணன் ஒரு காலத்தில் வசதியாக இருந்தார். இப்பொழுது அண்ணனுக்கு கொஞ்சம் கஷ்டம். நீங்கள் அவருக்கு பண உதவி செய்ய விரும்புகிறீர்கள். ஆனால் வங்கி ரொம்பத் தொலைவில் இருக்கின்றது. இது போன்ற சந்தர்ப்பத்தில் உங்களுக்கு உதவவே மக்கள் வங்கி YES சேமிப்புக் கணக்கை உங்களுக்கு வழங்குகின்றது. PET காட் உதவியுடன் நாடெங்குமுள்ள 602 மக்கள் வங்கிக் கிளைகளில் மற்றும் சேமிப்பு நிலையங்களில் நீங்கள் வங்கிச் சேவையை வசதியாகப் பெறலாம். எனவே நீங்களும் இன்றே மக்கள் வங்கியின் YES சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்.

*நீங்கள் சுதந்திரமாய் இருக்க விரும்புகிறீர்களா ?*

yes
Young Executive Savings




kit

**உங்களின் சகல தொலைபேசி அழைப்புக்களுக்கும் எந்நேரமும் டயலொக் உடன்**

**டயலொக்கின் புதிய சேவை நிலையங்கள் இல. 141 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். இல. 47, மத்திய வீதி, திருகோணமலை.**

கட்டணங்களை செலுத்துதல், புதிய இணைப்புகளை ஏற்படுத்துதல் (முன்னர் செலுத்தப்பட்ட - கார்ட் மற்றும் பின்னர் செலுத்தும் (பற்றுச்சீட்டு), புதிய தொலைபேசி கருவிகளை வாங்குதல், சார்ஜ் அட்டைகளை (Charged Cards) வாங்குதல், CLI, SMS உட்பட ஏனைய கட்டணத்துக்கான சேவைகளை இங்கே பெற்றுக்கொள்ளமுடியும்.

டயலொக் GSM
**எதிர்காலம் இன்றே.**

Ogilvy Outreach

# கிழக்கு முஸ்லிம்கள் ஆயுதம் தூக்கியுள்ளனர்
## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தகவல்

விடுதலைப் புலிகளின் நடவடிக் கைகளுக்கு எதிராகக் கிழக்கு மாகா ணத்தில் முஸ்லிம்கள் ஆயுதங்களைத் தூக்கத் தொடங்கியுள்ளனர். இதே வேளை, வடக்கு - கிழக்கு இணைப் புக்கு எதிர்ப்புத் தெரிவித்து 30 ஆயி ரம் முஸ்லிம்கள் கையெழுத்திட்டு மகஜர் ஒன்றை எனக்குச் சமர்ப்பித் துள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தொழிலதிபர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை அழைத்து கடந்த வியா ழனன்று நடத்திய கூட்டத்தில் உரை யாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில் கூறியதாவது:-

தேவையற்றவேளையில் நாடாளு மன்றத்தை நான் ஒருபோதும் கலைக்க மாட்டேன். நாடாளுமன்றம் கூடிய போது வழங்கிய உறுதிமொழியை நான் காப்பாற்றுவேன்.

அரசியல் ஸ்திரத்தன்மையைக் குழப்புவதோ சமாதான முன்னெடுப் புக்களைச் சீர்குலைக்கும் எண்ணமோ என்னிடமில்லை. அமைச்சுக்களை நான் பொறுப்பேற்றமை நாட்டின் பாது காப்புச் சம்பந்தமான விடயமாகும்.

- இதனால் அரசியல் ஸ்திரத் தன்மை அற்றுப்போய்விட்டதாகக் கருதமுடியாது. அரசமைப்பின்படி சகல அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு உள்ளது.

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட அரசமைப்பின்படி பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே இருந்து வருகிறது. 2001 ஆம் ஆண்டு - நான் நினைத்திருந்தால் - பாதுகாப்பு அமைச் சுப் பொறுப்பை ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குக் கொடுக்காமல் நானே வைத்திருந்திருக்கலாம். இருந்தபோதும், கடந்த இரண்டு வருட காலமாக நான் மிகவும் பொறுமை யைக் கடைப்பிடித்து வந்தேன்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் தேசிய அரசொன்றை அமைக்கும் யோசனையை நான் முன் வைத்துள்ளேன்.

இவ்விடயம் தொடர்பாகப் பிரதமரு டன் பேசி குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது. இது நன்மையயக்கும் ஒரு விடயம் என்றே நான் கருதுகி றேன். இந்த விடயத்தை இந்த அரசு ஆட்சிக்கு வந்தநாள் முதல் தெரி வித்து வந்துள்ளேன். புலிகள் இந்த யுத்த காலத்தைப் பயன்படுத்தி தமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை 6 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரமாக உயர்த்தியுள்ளனர். சிறுவர்களைத் தமது படைக்குச் சேர்த்துவருகின்றனர்.

முஸ்லிம்களை அச்சுறுத்திப் பணம் பறிக்கின்றனர். 18 தடவைகள் முஸ் லிம்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இதனால், இப்போது முஸ்லிம்களும் ஆயுதம் தூக்கத் தலைப்பட்டுவிட்டனர்.

- இப்படி அவர் தனதுரையில் தெரிவித்தார்.



இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காரைநகர் மேற்கு சமுர்த்தி செயலணியினால் புதிதாக நிறுவப்பட்ட பொதுக் கிணறு அண்மையில் பாவனைக்கு அனுமதிக்கப் பட்டது. இதுதொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் பொதுமகன் ஒருவர் குடிதண்ணீர் அள்ளுவதைப் படத்தில் காணலாம். உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம், சமுர்த்தி உதவி ஆணையாளர் [illegible], சமுர்த்தி முகாமையாளர் திருமதி எம்.வி.பத்மநாதன் [illegible] படத்தில் காணப்படுகின்றனர். (படம்: காரைநகர் செய்தியாளர்)

### கேள்விப்பத்திர முறையில் அனுமதிப்பத்திரங்கள்

# அரசின் தீர்மானம் வாபஸ் பெறப்படாவிடின் டிசெ.1 முதல் தனியார் பஸ் வேலைநிறுத்தம்

கொழும்பு,நவ.23

பிரயாணிகள் பஸ்களுக்கான மார்க்க அனுமதிப் பத்திரங்களை வழங்க கேள்விப்பத்திரம் கோருவ தென்ற அரசின் தீர்மானத்துக்கு அகில இலங்கை தனியார் பஸ் உரிமையா ளர்களின் சங்க சம்மேளனம் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றது.

இத்தீர்மானம் டிசெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் விலக்கிக் கொள்ளப் படாவிடின் டிசெம்பர் முதலாம் திகதி முதல் நாடு முழுவதிலும் பஸ் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படுமென்று சம் மேளனத்தின் தலைவரான ரூபன் சில்வா தெரிவித்திருக்கிறார்.

போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவுடன் கடந்த 17ஆம் திகதி நடத்திய பேச்சின்போது, மார்க்க அனுமதிப் பத்திரங்களுக்கு கேள் விப்பத்திரம் கோரும் முறையைக் கடைப்பிடிப்பதில்லை எனத் தீர்மானிக் கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தேசியப் போக்குவரத்து ஆணைக் குழு, தனியார் பஸ்களுக்கு மார்க்க அனுமதிப்பத்திரங்களை வழங்காத தால் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 600 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் படாமல் வீடுகளில் வைக்கப்பட்டிருப்ப தாகவும் ரூபன் சில்வா மேலும் தெரி வித்திருக்கிறார்.

# அஞ்சல் அ.அட்டைகளை உடன் வழங்க ஏற்பாடு

அச்சுவேலி,நவ.23

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக் குத் தோற்றுவதற்கு வசதியாக தபால் திணைக்கள அடையாள அட்டை களுக்கு விண்ணப்பித்த மாணவர் களுக்கு அவற்றை உடனுக்குடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளதாக யாழ். பிரதம தபால் திணைக்கள நிர்வாக உத்தியோகத் தர் ச.சிவராசசிங்கம் தெரிவித்தார்.

தபால் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அதனை ஒரு வார காலத்துக்குள் விண்ணப் பித்த தபால் அலுவலகத்திலேயே பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் -

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வரை விண்ணப்பித்த மாணவர் களுக்கு தபால் அடையாள அட்டை கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என் றும் - அவர் தெரிவித்தார். (எ-9-11)



மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தினரால் அளவெட்டி சேர் கனகசபை வித்தியாலயத்தில் வைத்து அப்பிரதேச மக்கள் 35 பேருக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. கழகத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் நுளம்பு வலைகளை மக்களுக்கு வழங்குகிறார். (படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)

## மோ.சைக்கிள் பலத்த சேதம்

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ். கே.கே.எஸ் வீதியில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியள வில் இடம்பெற்ற மினிபஸ் - மோட் டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

ஐயனார் கோயில் வீதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும், தெல் லிப்பழை நோக்கிச் சென்றுகொண் டிருந்த மினிபஸ்ஸுமே தட்டாதெரு சந்தியில் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

விபத்தைத் தவிர்க்கமுற்பட்ட மினி பஸ் அருகிலிருந்த படையினரின் காவ லரணுடன் மோதிக்கொண்டது.

வாகனங்களைச் செலுத்திவந்த சாரதிகள் இருவருக்குமே சாரதி அனு மதிப்பத்திரம் இல்லை என ஆரம்ப கட்டப் பொலீஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலீஸ் வட் டாரங்கள் தெரிவித்தன. (எ-9)

## 'சிசு உதான' அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.23

மக்கள் வங்கியின் 'சொல்வோம் வெல்வோம்' சிசு உதான பொது அறி வுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற் பகல் 3 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி யில் நடைபெறவுள்ளன.

இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியும் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியும் கலந்துகொள்ளவுள் ளன. (ஒ-10)

### மன்னார் கடற்கரையில் சம்பவம்:

# இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி மூடைகள் மீட்பு!

## சந்தேக நபர்கள் நால்வரும் கைதாகினர்

இந்தியாவிலிருந்து சட்ட விரோ தமாகக் கொண்டுவரப்பட்ட பீடிப்பொதி கள் அடங்கிய 28 மூடைகளுடன் நால் வரை மன்னார், ஓலைத்தொடுவாய், கீரிசல் கடற்கரைப் பிரதேசத்தில் வைத் துப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த வியாழன் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த மன்னார் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி யூ.ஏ.ஜே.பிரேமசிறி தலைமையிலான குழுவினரே இவர்களைக் கைதுசெய் தனர். இவர்களிடமிருந்து ஒரு படகும் மீட்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலிருந்து கடல் வழி யாக சட்டவிரோதமாகத் தருவிக்கப் பட்ட கஞ்சா, அபின் போன்ற போதைப் பொருள்கள் மன்னார் பகுதியில் புழக் கத்தில் உள்ளன என்றும் -

மன்னாரிலிருந்தே இப்போதைப் பொருள்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குக் கடத்தப்படுகின்றன என்றும்

கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ம)

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்றுவருகின்றன. வடமராட்சி, கரணவாய் பகுதியில் நேற்றுமுன் தினம் 27 மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். கரணவாய் அ.த.க. பாடசாலையில் பிற்பகல் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழீழ கல்விக்கழக வடமராட்சிப் பொறுப் பாளர் தாயகன் நினைவுரையாற்றி னார். நூற்றுக்கணக்கான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

# ஆடு, மாடுகளின் எச்சங்கள் கிணற்றுக்குள் வீசப்படுகின்றன

## கரம்பொன் மக்கள் முறைப்பாடு

ஊர்காவற்றுறை,நவ.23

ஊர்காவற்றுறை - கரம்பொன் கிழக் கில் இறைச்சிக்காக அனுமதியின்றி ஆடு, மாடுகளை வெட்டுவோர் அவற் றின் எச்சங்களை அப்பகுதியிலுள்ள கிணறுகளில் வீசிவிடுவதாக முறைப் பாடு தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மேற்படி பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலுள் இருந்து துர்நாற்றம் பரவியதையடுத்து அப் பகுதி மக்கள் அங்கு சென்று பார்த் துள்ளனர். இதன்போது இரண்டு மாடு கள் தலைகள் அற்ற அழுகிய நிலை யில் [illegible]

[illegible]

# ஜனாதிபதி புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

அச்சுவேலி,நவ.23

ஜனாதிபதியின் புத்தாயிரமாம் ஆண்டு புலமைப்பரிசிலுக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டு, 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி, ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இரண்டாயிரம் ரூபாவுக்கு குறை [illegible]

[illegible] (எ-11)

# போரால் பாதிக்கப்பட்டவர்களை பட்ஜட் திருப்திப்படுத்தவில்லை

## துரைரட்ணசிங்கம் எம்.பி. கவலை

கொழும்பு,நவ.23

வரவு - செலவுத்திட்டத்தில் சிறப்பு மிக்க பல திட்டங்கள் அறி விக்கப்பட்டபோதிலும், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக் களுக்கு எந்தவித நிவாரணமும் வழங் கப்படவில்லை என்பது கவலைக்குரி யது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப் பினர் கே.துரைரட்ணசிங்கம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

வரவு - செலவுத்திட்டத்தின் நன் மைகள் அடிமட்ட மக்களையும் சென் றடைவது அவசியம், அரச ஊழி [illegible]

[illegible]

# வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளின் கல்வி அதிகாரிகள் மாநாடு ஒத்திவைப்பு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் - 3 வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் தொடர் பான நிலையறி மதிப்பீடு, பகுப் பாய்வு ஆகியன குறித்து ஆராய் வதற்கென எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்வி அதிகாரி கள் மாநாடு எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போது நிலவும் சூழ் நிலையைக் கருத்திற்கொண்டு இம் மாநாட்டினை சில நாள்கள் ஒத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல் விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்தார். [illegible]



# தியாகிகளே! சுடரேற்றி மலர்தூவி வணங்குகின்றோம்

ஆறாகப் பாய்கின்ற குருதியிலே~ நின்று
போராடி அயர்கின்ற தியாகிகளே
சேறாகும் செம்மண்ணில் நீர் உயிர்ப்பீர்
பேறாகும் தமிழீழம் உமை வாழ்த்தும்.

அந்நியரிங் கெம்மண்ணைப் பறித்தெடுத்து
அவர்புரிந்த கொடுமைகளால் உள்ளம் வெந்து
ஆவேசங் கொண்டெழுந்து அவரைச் சாடி
அடிமைவிலங் குடைத்தெறிந்து அமரரானீர்.

பன்னரிய இம்சைகளைப் புரிந்தவரின்
பாசறையு ளூடுருவி அதிரடியால்
அவராழியத் தமிழினத்தின் மானங்காத்தீர்
அர்ப்பணிப்பின் தியாகிகளே அடி பணிந்தோம்.

தேசியத் தலைவனடிச் சுவட்டி லோடி
சிங்களத்துப் படைசரிக்கக் களத்திலாடி
வீரியத்தோ டுயிரை யீந்தீர் ஒன்றாய்க்கூடி
விண்முட்டும் புகழோடு உயிர்த் தெழுந்தீர்.

மெய்சிலிர்க்கு மர்ப்பணிப்பா லுலகை யீர்த்தீர்
வையகத்து மாந்தர்களை அதிரவைத்தீர்
வானகத்தில் வீற்றிருக்கும் தியாகிகளே
சுடரேற்றி மலர்தூவி வணங்குகின்றோம்.

-மாரீசன்.



# இவர்கள் திருந்துவார்களா?

அடுத்தவர் வாழ்க்கை
அகராதி முழுவதும் எம் கையில்
ஆனால் ~ எம்மைப்பற்றி
எமக்கே தெரிந்ததென்னமோ ~ பூஜ்ஜம்

மற்றவர் வாழ்வை
அவரின் பெயரை
விமர்சிப்பதே ~ இன்று
எம் முழு நேரத் தொழில்

பின்பு சொல்வதென்னமோ
ஐயோ எனக்கு
நேரமே இல்லை
நான் என்ன செய்ய?

அடுத்த வீட்டைப் பார்க்கும் மனிதனே!
உன்னை நீயே பார்ப்பதெப்போ?
எத்தனை எத்தனை ஓட்டைகள்
உந்தன் வாழ்வின்......

வேண்டாமே இந்த
ஈன வாழ்க்கை
மனிதனே!
நீ திருந்துவதெப்போ?

-S.ஆஷா

# என்றுமே அணையாத தீபங்கள்!

இலைகள் உதிர்வதால்தான் ~நாளை
புதிய தளிர்களை பிரசவிக்கின்றன.
சூரியன் மாலையில் அஸ்தமிப்பதால்தான்
மறுநாள் காலையில் உதயமாகின்றான்.
நீங்கள் கல்லறையில் உறங்குவதால்தான்
நாங்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம்
தேச விடுதலைக்காய் விதையாகிப்போன
எங்கள் தேசத்தின் முத்துக்களே!
எங்கள் விடிவானில் சஞ்சரிக்கும்
விடுதலைச் சூரியர்களே!
இனம்வாழ இருளோடு இருளாக
அலையோடு அலையாக
அஸ்தமித்துப் போன
எங்கள் மாவீர மணிகளே!
கொட்டும் மழையிலும்
உங்கள் கல்லறைத் தீபங்கள்
சுடர்விட்டு எரிகின்றன.
நீங்கள் செய்த யாகங்கள்
என்றுமே அணையாத தீபங்களாய்
எம் நெஞ்சங்களில்.

~உடும்பையூர் உதயநிலா.



# மன்னிக்க முடியாமல்....

இருள் மொய்த்த
ஓர் விடிகாலைப் பொழுதில்
கட்டில் சுகமும்
தலையாணை நெருக்கமும்,
என் பாட்டியின் மடி போலவும்,
தாயின் தழுவல் போன்றும்
உடலை, ஆன்மாவையும்
இறுகப்பற்ற பெரும் பிரயத்தனங்களுடன்
நானிருந்தேன்.............!
விழிகளின் தேடல்
பரபரப்பில் நிலைக்க
காலத்தை விமர்சித்தபடி
அசைகிறது வாழ்வு வெற்றிடங்களுடனும்,
விரக்தியுடனும் ..........!
மழையோ, வெயிலோ அல்லது
பிறிதொன்றோ கடமைக்காய்
அந்தரித்தலை அதிகரிக்க~ நான்
பைத்தியமானேன். சில பொழுதில்
முதுகுச்சுமை தாழாது
பாறி வீழ்ந்தது மனசு......
கரைந்து போன காலத்தை மன்னிக்க முடியாமல்
எல்லாவற்றையும் இழந்தவனானேன்..........
பசுமையான கனவு,
இனிமையான பயணம்
கடமை, உழைப்பு, வியர்வை,
மனிதர்கள்.......
எல்லாம் தான் .... எல்லாமும் தான்.......!
ஒரு நாள் பிரச்சினையால்
ஒவ்வொரு நாளும் பைத்தியமாகின்றேன்.
இது
நீண்ட போர் தந்திருக்கும்
சோகங்களையும் தாண்டி ~ ரகசியமாய்
என்னுள் அழுத்தும்
வேதனையின் மொழி......!

-A.மருதம் கேதீஸ்.

## சமர்க் களம்

நற்றமிழ்க் கவிதைகளால் சமர் புரிந்த பழந்தமிழ்ப் புலவர்கள் பலர். பரமசிவனையே நற்றமிழ்க் கவிதையால் வெளுத்து வாங்கியவர் நக்கீரர். ஔவையாரும், கம்பரும் கவிதைகளால் மோதிக் களம் பல கண்டவர்கள். ஒட்டக் கூத்தரும். புகழேந்தியும் ஏட்டிக்குப் போட்டியாகப் பாடியது பிரசித்தம். இவர்கள் நற்றமிழ்ச் சொற்களைச் சரங்களாகத் தொடுத்துச் சமர் புரிந்ததால் தமிழ் செழுமை அடைந்தது. புலவர்கள் வித்துவச் செருக்கும் தணிந்தது. அதற்கு மேலாகத் தமிழ்க் கவிதையை நேசிப்போரும், படித்துச் சுவைப்போரும் பயன் அடைந்தனர்.

அதேபோல் இங்கு கவிதைச் சமர்க்களம் ஒன்றை ஆரம்பிக்கின்றோம். இதில் முதல் கணையாக லோ. துஷிகரனின் கவிதை புறப்படுகிறது. இதற்கு நல்லதோர் கவிஞர் தக்கதோர் பதிலை தருவார் என எதிர்பார்க்கின்றோம். இப்படியே பதில் கவிதைகளால் சமர்க்களம் வளரும்.....



# திறந்ததும்! பறந்ததும்!

எரிமலை உச்சி பொங்கி
எரிந்திடும் காலம் அன்று
புரிந்தவர் எங்கள் மண்ணில்
புயலிலும் எதிர்த்து வாழ்ந்தார்!

எதிரிகள் எரிந்த துண்டு!
எம்மவர் வென்ற துண்டு!
எதிரிலே வந்த தூதால்
எங்குமே அமைதி கண்டோம்!

ஏ-9 என்ற சொல்லும்
எம்மினப் பாதை ஆச்சு!
ஊரினை நோக்கி அந்த
ஊர்திகள் நிறைதலீ ஆச்சு!

வந்தவர் சும்மா அல்ல
வரன்களாய் நோய்கள் காவி
வல்லமை கொண்ட எம்மை
வலையினுள் வீழ்த்தி விட்டார்!

தேடிய பெரிய சொத்து
தீயிலே எரிந்து போக
தேவனே "ஒழுக்கம்" என்ற
திருக்குறட் பக்கம் காப்பீர்!

நரம்பிலா மக்கள் மீது
நாகரிக மோகம் ஏறி
நம்மவர் தலைவர் எல்லாம்
நாயிலும் கீழோர் ஆனார்!

பஞ்சினை நெருப்புப் பற்றும்
பருவத்தில் பலதும் பற்றும்!
விஞ்சிய அறிவால் எம்மை
விரைந்துமே காப்போம்! வெல்வோம்!

இனியுமா வேண்டும் ஏ-9 - எம்
இனம் மதம் ஏரிந்து போக,
தனித்துமே இருந்து வாழ்வோம்!
தாயக மானம் காப்போம்!

-லோ.துஷிகரன்



# சூரியப் பூக்கள்....!

எம் இனத்தின் அஸ்தமனங்களை
உதயமாக்க உதிர்ந்து போன
சூரியப்பூக்களே~ நீங்கள்
உதிர்ந்ததினால்தான் ~நாம்
மலர்ந்திருக்கிறோம் ~ நீவிர்
கல்லறைகளில் உறங்கினாலும் ~ தமிழர்
நெஞ்சறைகளில் உறங்காது
உங்கள் நினைவு......

~எஸ்.கவிதரன்.

# திருமணம் புரிபவர்களுக்குத் திருவள்ளுவர் அறிவுரை



மனிதவாழ்வின் விளக்கமாக அமைந்துள்ளது திருக்குறள். இல்லறம் மனித வாழ்வு என்னும் வண்டியின் அச்சாக அமைந்துள்ளது. எனவே, இல்லறம் - திருமணவாழ்வு மனித வாழ்வில் சிறப்பு அம்சம் வகிக்கிறது என்று துணிந்து கூறலாம்.

திருமண விஷயத்தில் நம் முன்னோர் அதிக கவனம் செலுத்தினர் . நீண்டகாலம் எடுத்துத் தாம் ஆராய்ந்தும் பிறரை ஆராயச் செய்தும் மணமகன் - மணமகள் ஒருவருக்கு ஒருவர் பொருத்தமானவரா என்பதைத் தெளிந்த பின்பே திருமணத்தை நிச்சயித்தனர்.

இக்காலம் அவசரகாலம். வெளிநாட்டில் இருந்து ஒருவன் வருவான். இரண்டு வார விடுமுறையில் வந்திருக்கிறேன். திருமணம் செய்து கொண்டு போகவேண்டும் என்பான். பெற்றோர் தரகரை நாடுவர். இரண்டு வாரத்துக்குள் திருமணம் முடிந்து மணமகன் மணமகளுடன் வெளிநாடு சென்றுவிடுவான். இத்தகைய அவசர திருமணங்களில் நூற்றுக்கு ஒன்று வாய்க்கலாம். பெரும்பாலானவை பொருந்தாமணமாகவே முடிகின்றன.

## திருவள்ளுவர் அறிவுரை!

திருவள்ளுவர் மணமகன் மணமகள் மீதும், மணமகள் மணமகன் மீதும் வைக்கும் அன்பையே இல்லறத்தின் உயிர்நாடியாகக் கொள்கிறார். அன்பில்லாத மணமகனும், மணமகளுமோ அல்லது அன்பில்லாத மணமகளும் மணமகனுமோ சேர்ந்து வாழ்வது பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்ப்பது போன்றது என்கிறார். வெளி உலகினர் இவர்கள் ஒன்றாக வாழ்வதாகக் கருதலாம். ஆனால் : இவர்கள் வாழ்வது பொருந்தா வாழ்வே!

"அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை
வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்தற்று"

என்பது திருக்குறள்.

பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்க்குமா? அது போலத்தான் அன்பில்லாத மணமகனும் அன்பில்லாத மணமகளும் சேர்ந்து வாழும் வாழ்விலும் இன்பம் தளிர்க்காது.

"அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" என்பது குறுந்தொகைப் பாடல் அடி. நெஞ்சம் கலவாது உடல் கலந்து வாழ்தல் இன்ப வாழ்வாக முடியுமா?

திருமணத்துக்கு அன்பே பிரதானம் என்பதை ஔவையார் கூறும் போது "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்கிறார்.

ஒத்த அன்பை விளக்க வந்த திருவள்ளுவர் தராசை உவமை கூறுகிறார். சரியான தராசில் தட்டு இரண்டும் சமனாக இருக்கும். இரண்டு தட்டும் சமமாக இல்லாவிட்டால் அது தராசு அல்ல. அது போலத்தான் மணமகனிடத்தும் மணமகளிடத்தும் அன்பு சமமாக இல்லாவிட்டால் அது திருமண வாழ்வு அல்ல.

"ஒரு தலையான் இன்னாது காமம் காப்போல
இருதலையானும் இனிது"

என்கிறார்.

ஒரு பக்கத்தில் மட்டும் அன்பு இருப்பது இன்பமாகாது. தராசுபோல மணமகன் - மணமகள் இருவரிடமும் சம அன்பு இருக்கவேண்டும் என்கிறார்.

திருமணம் பேசும் போதே எத்தனை லட்சம் கொடுப்பார்கள் என்று கேட்கிற மணமகனும் எவ்வளவு பெருந்தொகை சம்பளம் என்று கேட்கிற மணமகளும் திருமண அவசரத்தில் இந்த இரண்டையுமே அவதானிக்கின்றனர். பொருள் வாழ்க்கைக்குத் தேவை தான் ஆகும். அன்பு பொருளை விடப் பிரதான தேவை ஆகிறது.

அன்பு இருக்கும் இடத்தில்தான் இரக்கமும் இருக்கும். மனைவியின் கண்ணீரைக்கண்டு துடிதுடிக்காத கணவன் ஒரு பெண்ணுக்குக் கணவனாக இருக்கும் தகுதியை இழந்து விடுகிறான். அதேபோலக் கணவனுக்குத் துன்பம் வரும் போதும் மனதுடிதுடிக்காத பெண் மனைவி என்ற தகுதியை இழந்து விடுகிறாள்.

"துடியாப் பெண்டிர் மடியில்
நெருப்பு"

என்றார் ஔவையார்.

ஒருவருக்காக ஒருவர் துடிக்கும் நிலை அன்பும் இரக்கமும் கொண்ட மணமகன் மணமகளுக்கே ஏற்படும்.

திருவள்ளுவர் கூறிய மணமகன் - மணமகள் அன்புக்கு விளக்கம் போல அமைந்திருக்கிறது அமெரிக்கச் சிறுகதை ஒன்று.

காதலன் ஒருவனும் காதலி ஒருத்தியும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்து கொள்கிறார்கள். வாழ்வு வறுமையிலேயே தொடர்கிறது ஆனால் அன்பே சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. அவர்கள் திருமணம் புரிந்து ஓராண்டு நிறைவு பெறுகிறது. ஓராண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாட இருவரும் விரும்புகின்றனர். ஒருவருக்கு ஒருவர் அன்று பரிசளிக்கவும் விரும்புகின்றனர். ஆனால், பரிசுப் பொருளை வாங்கக் கையிற் பணம் இல்லை.

என்ன செய்யலாம் என்ற ஏக்கத்தோடு காலை வெளியே சென்ற காதலன், தனது காதலியின் அழகிய நீண்ட கூந்தலை நினைக்கிறான். அந்த நீண்ட கூந்தலிற் சூடுவதற்கு ஒரு பொன்னாலான மலரமைந்த "புறோச" ஒன்றை வாங்குகிறான்.

தன்கையில் இருந்த கடிகாரத்தை விற்று அந்தக் காசிற்குப் "புறோச்"சை விலைக்கு வாங்கினான். "புறோச" வாங்கிவிட்ட சந்தோஷத்தில் வீடு திரும்புகிறான்.

காதலியும் காலையில் கடை வீதிக்குச் செல்கிறாள். தன் காதலனுக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று எண்ணுகிறாள். காதலனின் கடிகாரம் தோலினால் ஆன பட்டியுடன்தானே இருக்கிறது. தோல் பட்டிக்குப் பதிலாகத் தங்கத்தினால் ஆன "செயின்" ஒன்றை வாங்கிக் கொடுக்கலாமே என நினைக்கிறாள். அதற்குப் பணம் வேண்டுமே! அழகிய நீண்ட கூந்தல்களை விலைகொடுத்து வாங்கி அதன் மூலம் ஆடம்பரமான முடிமயிர் தயாரிக்கும் கடைக்குச் சென்றாள். தனது நீண்ட கூந்தலை விற்றாள். அந்தப் பணத்தில் காதலனின் கைக் கடிகாரத்துக்குச் "செயின்" வாங்கினாள். மகிழ்ச்சியோடு வீடு திரும்பினாள்.

என்ன ஏமாற்றம்? காதலி கொண்டுவந்த தங்கச் செயினைக் கட்டுவதற் குக் காதலன் கையில் கடிகாரம் இல்லை காதலன் கொண்டு வந்த தங்கப் 'புறோச்'சை அணிவதற்குக் காதலியின் நீண்ட கூந்தல் இல்லை. அவர்களுக்கு ஏமாற்றமானாலும் அன்பு என்னும் தராசில் இரு தட்டுகளும் சமமாகி விட்டனவே.

தொடரும்.....

புலவர் ம.பார்வதிநாதசிவம்



வவுனியா பிரதேச இலக்கிய விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனுக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கிறார். 2001இல் வெளியிடப்பட்ட அவரது "நீர்சனத்தின் புத்திரர்கள்." நாடக எழுத்துருக்கள் எனும் நூலுக்கு அரச சாகித்திய விருது கிடைத்ததை பாராட்டியும் வவுனியாவில் அவரது கலை இலக்கியப் பணிகளுக்குமாகவும் இந்தக் கௌரவிப்பு நடைபெற்றது. (ஐ)

# கௌதமரின் பலமும் பலவீனமும்

## இலக்கியச் சோலை

பிரமதேவன் பிரஜைகளைப் படைத்து வரும்போது, சிந்தனை வயப்பட்டான். அவனது சிந்தனையில் விரிந்த ஒரு கருத்து உலகத்திலுள்ளவர்களின் பல்வேறு சிறப்பியல்புகளைத் தனித்தனியே எடுத்து ஒரு பெண்ணைப் படைத்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்தான். சிந்தனை செயலாயிற்று. அகலிகை படைக்கப்பட்டாள். "ஹலம்" என்றால் கண்ணுக்கு இனிமை இல்லாதது என்று பொருள். அஹல்யா என்றால் அழகின்மை இல்லாதது அதாவது மிகச்சிறந்தது என்று பொருள்.

அப்பெண்ணை இந்திரன் பார்த்தான். நூறு அஸ்வமேதயாகங்கள் செய்து இப்பெரும் பதவியைப் பெற்ற அவனது கர்வம் கண்களை மூடியது. இவள் தனக்கே உரியவள் என்று கர்வம் கொண்டான். பிரமனோ இந்திரனின் கர்வ பங்கத்தையே விரும்பினான். எனவே, அஹல்யாவைக் கௌதமமுனிவரிடம் அடைக்கலமாகக் கொடுத்தான். அதுகாறும் சபலப்படாமலே இருந்த கௌதமமுனிவர் வெகுகாலத்துக்குப் பிறகு பிரமனிடம் அகலியை ஒப்படைத்தார்.

கௌதம முனிவரின் மனம் சஞ்சலப்படாதிருந்ததையும் அவரது தவ நிட்டையையும் கண்டு உவந்த பிரமன் அஹலிகையை அம்முனிவருக்கே தாரமாக்கினான். இந்திரன் மனம் வெம்பிற்று. எனினும் சந்தர்ப்பம் பார்த்திருந்தான். இதனைக் கம்பர்

"தையலாலணயன வேலும் மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதி நாடி யுழல்பவன் ஒரு நாளுற்ற
மையலாலறிவு நீங்கி மாமுனிக்குற்றம் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்றன் உருவமே கொண்டு புக்கான்"

அகலிகையின் கண்களாகிய வேலும் மன்மதன் பாணங்களும் அவன்மேல் பாய்வதனால் மிக வருந்தினான். அக்காம நோயிலிருந்து உய்யலாம் என்று கருதி தவறானதொரு முடிவுக்கு வந்தான். தான் கொண்ட மையலால் நல்லறிவு கெட்டு மகாமுனிவராகிய கௌதமருக்கு போலிப்பிரிவை உண்டாக்கி அகாலத்தில் சேவலாகக் கூவினான் என்பது வரலாறு. பொய்மை இல்லாத முனிவரது வடிவத்தையே தாங்கி கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றான்.

இந்திரனுக்கு பெண்களின் மனப்பாங்கு தெரிந்திருக்க வேண்டும். தன்னுடன் இருந்தும் சபலப்படாத கௌதமன் அகல்யைக்கு ஏற்ற வாழ்வைக் கொடுத்திருக்கமாட்டார் என்று ஊகித்திருப்பான். நம்பிக்கையோடு புறப்பட்டான். அவனது நம்பிக்கை பொய்க்கவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தது. அகலிகை ஏமாந்தாளா? இல்லை வேண்டும் என்றே தவறிழைத்தாளா? அதற்கும் கம்பரே பதில் தருகின்றார்.

"புக்கவளோடுங் காமம் புதுமண மதுவின் தேறல்
ஒக்கவுண்டிருக்கலோடு உணர்ந்தனள் உணர்ந்த பின்றும்
தக்கதென்றென வோரா டாழ்ந்தனள் இருந்தாளாக
முக்கண ஐயனை வாற்றல் முனிவனும் முடுகிவந்தான்"

இவ்வாறு வேற்றுருவங் கொண்டு காமமாகிய புதியவாசனையுடைய மதுவினது தெளிவை இந்திரனுடன் தான் அனுபவித்துக் கொண்டிருக்கையில் தன்னோடிருப்பவன் தன்கணவனல்லன் இந்திரனே என்று உணர்ந்தாள். அப்படி உணர்ந்த பின்னரும் இது தனக்குத் தகுதியானதன்று தெளியாது அக்கீழ்த்தரமான செய்கைக்கு ஒத்துப்போனாள் அகலிகை.

இந்திரன் வஞ்சனையால் தான் எழுந்து புறப்பட்டு போனதும் அகலிகையின் பலவீனமும் சிவனையொத்த கௌதமமுனிவருக்கு ஞானக்கண்ணிலே தெரிந்தது. தெரிந்த உடனே மிகவேகமாக வீடு நோக்கி கௌதமர் வந்தார். பலன் அஹலிகை கல்லானாள். இந்திரன் ஆயிரம் பெண்யோனிகளை உடல் முழுவதும் பெற்றான். எதனைத் தேடி வந்தானோ அதனை அதிகம் பெற்றான். பின்னர் தேவர்களின் விருப்பப்படி இந்திரன் ஆயிரம் கண்கள் பெறுவதாக என்று கௌதமர் உடனே சாபத்தை மாற்றினார். ஆனால் அஹலிகையை ஆயிரமாண்டு கல்லாயிருக்கவிட்டார் கௌதமர்.

இச்சரிதையில் முனிவரின் பலவீனமும் ஒரு காரணம் என்று வாதிடுவோரும் உண்டு. எது எப்படி இருப்பினும் ஒருவரது பலவீனத்தை இன்னொருவரது பலம் என்று எடுத்துச் செயற்பட்டால் இந்திரனின் கதியே நடக்கும் என்பதற்கு அகலிகையின் வரலாறு ஓர் எடுத்துக் காட்டு என்பதே உண்மையாகும்.

-உதங்கா-

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 11 - 02 - 1939



மண்ணின் மடியில் 04 - 12 - 2002

### அமரர் சேகரம்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் "உதய சூரியன்" வாகன உரிமையாளரும் சிற்பக்கலைஞரும்)

இதயத்தில் தீயாய் எரிந்திடும் உம்
இழப்பை மறந்திடுமா எம் நெஞ்சம்?
அருவி நீர் சொரியும் விழிகளுடன்
உழலுகிறோம் ஊமைகளாய் இன்று!
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
உங்கள் அறிவு புகட்டும் பாசத்திற்கு
ஈடாகுமா? அப்பா.....!
நீங்கள் மறைந்து ஓராண்டானதுவோ?
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
மறவாது உங்கள் நினைவுகள்

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி.*

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையிடம் 08 - 06 - 1937



ஆண்டவரிடம் 23 - 11 - 2002

### அமரர் செ.பேணாட் இராஜேந்திரம்

"ஆண்டவரின் இல்லத்தில் குடியிருப்பேன் ஊழி ஊழிக் காலமும் நான் குடியிருப்பேன்."

இவரது ஆன்மா இறைவனில் அமைதி கொள்ளப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் உம்நினைவில்:
மனைவி - இ.பேணடேற் *(திரவியம்)*,
மகன் - இ.ஜோய் திலீப்குமார்.

(24941) (26-11-15-21)

## நீங்கா நினைவில் எட்டாண்டுகள்

தோற்றம் 03 - 11 - 1941



மறைவு 23 - 11 - 1995



தோற்றம் 18 - 08 - 1983

**அமரர் கனகசபை சண்முகசுந்தரம்** (சோமு)
(உரிமையாளர் சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்)

**அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்** (டியூக்கோ)
(மாணவன், யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி)

மொட்டை மலரை காலன் கருக்கி
எட்டு ஆண்டுகள் பட்டுப் போனது
வட்ட நிலா இலா வானம் போல - எம்மை
முட்டு இருளில் விட்டுப்பிரிந்தீரே!

- குடும்பத்தினர்.

சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்,
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்


## சேவை

உங்கள் வியாபார நிலையங்களின் கணக்குகளை ஒழுங்கான முறையில் பதிவுசெய்து கொள்ளவும் இலாப நட்டங்களை (ஆண்டு இறுதிக் கணக்குகளை) அறிந்து கொள்ளவும் கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும.

பா.அருணன்
ஆலடி வீதி (சந்திக்கு அருகில்)
கோண்டாவில் கிழக்கு

## யாழ்நகரில் கல் இல்லாத K.R.S.

No.I நாடு
No.I சம்பா
No.I திட்டல் பச்சை
No.I உழுத்தம்பருப்பு

சகல வர்த்தக ஸ்தாபனங்களிலும் 10 Kg பைக்கற்றுக்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**இராசம் அரிசி ஆலை**
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

## கம்ப்யூட்டர் உலகம்

இலங்கையின் முழுமையான கணனி மாத சஞ்சிகையின் வெளியீடுகள்

- ❑ 12 மாத கம்ப்யூட்டர் உலகம் ரூ 300/=
- ❑ முழு கணனி வழிகாட்டி ரூ 250/=

தமிழ் மூலமான வழிகாட்டி நூல்கள்

- ❑ கணனி அறிமுகம் ரூ 40/=
- ❑ இன்டர்நெட் ரூ 40/=
- ❑ HTML (தமிழ்) ரூ 40/=
- ❑ WORD (தமிழ்) ரூ 40/=
- ❑ EXCEL (தமிழ்) ரூ 40/=
- ❑ ACCESS (தமிழ்) ரூ 50/=
- ❑ Power Point (தமிழ்) ரூ 40/=
- ❑ HARDWARE (தமிழ்) ரூ 50/=
- ❑ Java Script (தமிழ்) ரூ 50/=
- ❑ VB Script (தமிழ்) ரூ 50/=
- ❑ Flash (தமிழ்) ரூ 50/=
- ❑ ASP (தமிழ்) ரூ 80/=

சந்தா மற்றும் வேண்டுகை படிவம்

பெயர்:..............................
முகவரி:..............................

காசுக்கட்டளையை 'COMPUTER ULAGAM' என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்ப வேண்டிய முகவரி.

COMPUTER ULAGAM
22-1/3, GALLE ROAD,
DEHIWALA.

## இடம் மாற்றம்

187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் இயங்கிவந்த அழகுக்கலை நிபுணரான

**Mrs.Gowri - Rajendraprasad**
(Diploma in H.Ecom., Diploma in B.Culture)
(Advanced Diploma in Herbal Beauty & Beauty Therapy)

அவர்களின்

**Beauty Centre for Ladies**

தற்சமயம் "ராஜஸ்தான்", 118/14, பலாலி வீதியில் இயங்கி வருகிறது என்பதை அறியத்தருகிறேன்.
(தபாற் பெட்டிச் சந்தியடி
திருநெல்வேலி சந்திக்கும் - பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில்)

Cantact T.P. Number - 222 2982
077 - 6057273

(24793) (33-21-15-11)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 1937 - 04 - 04



விண்ணில் 2002 - 12 - 04

### அமரர் மயிலு கதிரமலை

(நெல்லியடி அல்வாய் சிவசக்தி நிலைய உரிமையாளர்)

திதி: 23.11.2003

ஆண்டொன்று கடந்தாப்ப் பறந்ததுவே!
ஆசை முகம் மறக்க முடியவில்லை!
பித்தாகிப் போனதுவே எம் நெஞ்சு!
பிரியாது இங்கு உம் நினைவில் வாழ்கிறோம்.

பிரிவால் வாடும்:
மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

*வெல்வத்தை, நெல்லியடி.* (24903) (25-11-15-12)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 06 - 1938



உதிர்வு 04 - 12 - 2002

### திருமதி பூரணதேவி இராசதுரை

திதி: 23.11.2003

ஓராண்டு என்ன? எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்
எமது நெஞ்சில் அழியாது உங்கள் நினைவு.

*என்றும் உங்கள் நினைவோடு வாழும்:*
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வேம்போலை,
இணுவில் கிழக்கு. (24872)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 13 - 06 - 1925



மறைவு 11 - 10 - 2003

### திருமதி ஆறுமுகம் தெய்வானை

அன்பான பார்வையிலே
அனைவரையும் நெகிழ வைத்தாய்
அரவணைத்து மகிழ்கையிலே
அம்மா நீ தெய்வமன்றோ?
நீ நிலம் பார்த்து நடக்கையிலே
நில மகளும் நாணி நிற்பாள்!
நின்பாதம் தொழ மறந்தால்
நிம்மதியும் பறந்தோடும்!
பொறுமைக்கு இலக்கணமாய்
பெருமையாய் வாழ்ந்தவளே!
தாயே நின் பிரிவினால்
தளர்ந்து தவிக்கின்றோம்
தரணியிலே தெய்வங்கள்
வேறுளதோ கூறம்மா?

நாளை (24.11.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியம், மதியோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*கிறேசலடி, ஊரெழு மேற்கு, சுன்னாகம்.* (24913)

# சர்வமத சம்மத சாயி



ஸ்ரீ சத்திய சாயிபாபா ஒரு தெய்வீக அவராதம் என்று உள்ளத்தால் ஏற்றுக்கொண்ட லட்சக் கணக்கானோர், இன்று இந்திய ஆந்திர பிரதேசத்தின் புட்டபர்த்தியில் கூடுகிறார்கள், அப்படியான இன்னும் கோடிக்கணககானோர் தமது நாடுகளிலே உள்ள சாயி சேவா நிலையங்களிலே தங்கள் பிறந்ததினம்போல் கொண்டாடுகிறார்கள். அவர்களுக்கு இன்று மிகவும் சிறந்த நாள்.

இன்று உலகிலே 175 நாடுகளில் இந்தியாவுக்கு அப்பால் 2500 சாயி சேவா நிலையங்கள் உண்டு.

ஐக்கிய நாட்டுச் சபையின் அங்கத்துவ நாடுகள் 191 என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த நிலையங்களில் எல்லா மதத்தினரும் இருப்பார்கள். அந்த அந்த நாட்டின் மதத்தினர் அதிகமாக இருப்பர். புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில், ஏன் கொழும்பு பார்ன்ஸ் பிளேஸ் சாயி மண்டபத்தில் பஜனை நடக்கும் போது உங்கள் பக்கத்தில் இருப்பவர் சைவ சமயத்தினராகவோ, புத்த சமயத்தினராகவோ, கிறிஸ்தவராகவோ இருக்கலாம். காரணம், அவர் கூற்றுக்களை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

'நான் ஒரு புதிய மதத்தை உண்டாக்க வரவில்லை. உங்கள் ஒவ்வொருவரின் மதங்களிலுள்ள உள்ளார்ந்த உண்மைகளை வலியுறுத்தவே வந்துள்ளேன்.' சத்தியத்தின் மூலமும் அன்பின் மூலமும் மனித குலத்திலே ஆதமீக சீர்திருத்தத்தை ஆக்குவதே எனது பணியாகும்.

'பிரபஞ்சம் கடவுளின் தோற்றம். ஒவ்வொரு மனிதனிலும் கண்காணத நுட்பமான தெய்வீகம் உண்டு.'

'கடவுளை வணங்கி, அவரது மறு வடிவான மனிதனை அடக்குவதால் என்னபயன்? கடவுள் மேல் அன்பானது, மனிதன் மேல் அன்பாக அமைந்து மனித சேவையில் வெளிப்பட வேண்டும்.'

- இப்படி எத்தனையோ விளக்கங்களைத் தரும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஒரு பிரேம ஸ்வரூபியாகவும் எல்லா மதங்களைச் சார்ந்த மக்களையும் ஒன்றிணைக்கும் சத்திய போதகராகவும் இருக்கிறார்.

## சாயி பாபாவின் அவதாரதினம் இன்று

எல்லா மதங்களும் ஒரே கடவுள் என்ற கொள்கையை ஏற்றுக்கொள்கின்றன. அந்தக் கடவுளை வணங்கும் விதத்தில்தான் வேறுபாடுகள். அந்த வேறுபாட்டில் பிறப்பனதான் அர்த்தமில்லாத உணர்ச்சி வசப்பட்ட வெறுப்பும், கவலைதரும் சம்பவங்களும். 'ஒரே ஒரு கடவுள் அவர் எங்கும் இருக்கிறார்' என்ற சாத்வீக சிந்தனையை எண்ணத்திலும் சொல்லிலும் மட்டுமல்ல, நாளாந்த நடைமுறையிலும் செயற்படுத்துவதே சத்தியசாயி முறைமை ஆகும். அல்லாவிடில், சாயி சேவா நிலையங்களில் மட்டுமல்ல, சாதாரண சாயி வீடுகளிலும் சைவ மதக் கடவுளர், யேசு, புத்தர் படங்களும் இஸ்லாமிய பெரும் மசூதியின் படமும் அக்கம் பக்கமாக இருக்குமா? அவற்றிக்கு பூவும் மாலையும் அணியப்பட்டிருக்குமா? 21ஆம் நூற்றாண்டின் உலக அமைதிக்கு இத்தகைய சர்வ மத சமரச சிந்தனை மிகவும் தேவையாகும்.

எல்லோரிலும் தெய்வத்தின் உயிர்ப்பு உண்டு, 'நீயும் தெய்வம்' என்று கூறும் பகவானை, அவரது பக்தர்கள் தெய்வம் என்றே வணங்குகிறார்கள். அவரது அன்பின் ஆட்சி, அதன் கட்டுக்கடங்காத பிரவாகம், அவரது மகத்தான அற்புதங்கள், அவற்றின் தார்மீக அர்த்தங்கள், மனித குலத்தின் உய்விற்காக அவர் காட்டும் சேவைமுன்மாதிரிகள் எல்லாம் அவரை மனிதத்திற்கு வெகு அப்பாலுள்ள ஒரு மாசக்தியின் உருவம் என்றே காட்டுகின்றன. இதனை இதய பூர்வமாகவும் அறிவின் அடிப்படையிலும் உணர்ந்த பல அறிஞர்கள் 'கடவுள்' என்றே பெயரிட்டு அரிய நூல்கள் எழுதியுள்ளனர். உதாரணமாக, என்.கஸ்தூரி எழுதிய LOVING GOD (அன்பார்ந்த கடவுள்), ஆபிரிக்கரான விக்றர் கானு எழுதிய SATHYA SAI BABA GOD INCARNATE (சத்திய சாயி பாபா கடவுள் அவதாரம்), முப்பது லட்சம் வாசகரைக் கொண்ட BLITZ என்ற சஞ்சிகையின் ஆசிரியர் R.K கரன் ஜியா எழுதிய GOD LIVES IN INDIA (கடவுள் இந்தியாவில் வாழ்கிறார்) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். R.K. கரன் ஜியா சாயி பக்தராக இருக்கவில்லை. சாயி பக்தர்களின் அனுபவங்களை நம்பாதவராகவும், சாயிபாபாவை ஒரு விதத்தில் எதிர்ப்பவராகவும் இருந்தவர். ஆனால், செய்திகளின் உண்மையையும், பொய்மையையும், நன்மையையும் தீமையையும் தானே நேரில் அறிந்து எழுதி BLITZ என்ற பத்திரிகையை அறிவு உலகிலே புரட்சி செய்யவைத்தவர். அவர் பகவானை நேரிலே சந்தித்து இரண்டு மணித்தியாலயங்களுக்கு மேல் கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்டு, பகவானின் ஆணித்தரமான கருத்துக்களையும் அற்புதங்களையும் அனுபவித்து எழுதிய நூல் தான் 'இந்தியாவில் கடவுள் வாழ்கிறார்' என்ற நூல். அதில் பகவானை 'ஒரு பிரபஞ்ச அற்புத நிகழ்வு' என்று வர்ணிக்கிறார்! இவ்வாறு பகவானைச் சோதிக்கப் போய் அவர் போதனைகளின் தீவிர சாதனையாளராகவும் அவரைப் பரந்த உலகிற்கு பல மொழிகளில் அறிமுகம் செய்யும் நூலாசிரியர்களாகவும் மாறியவர் அநேகர், இவர்களில் கவிஞர், பத்திரிகையாளர், விஞ்ஞானிகள், ஆத்மீகவியலாளர், உன்னத தகைமையுடைய அரசியல் தலைவர்கள் ஆயிரக்கணக்கில் உளர்.

பகவான் சாயிபாபா உலகிற்கு அறிமுகப்படுத்திய கல்வி முறை 21 ஆம் நூற்றாண்டிற்கு மிகவும் வேண்டியது ஒன்றாகக் கல்விமான்களால் கருதப்படுகிறது. சிறுவயதிலேயே ஒரு பிள்ளை தன்னுள் சுமைந்து இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து, அன்பின் அடிப்படையிலே சத்தியத்தைக் கடைப்பிடித்து, மக்கள் சேவையை தர்மமாகக் கொண்டு, பிரபஞ்சத்தின் எல்லா சீவராசிகளுடனும் பஞ்சபூதங்களுடனும் இசைந்து, அஹிம்சை வழியில் வாழ்ந்து சாந்தி என்ற மனப்பக்குவத்தை அடைய வழி வகுப்பதே இந்தக் கல்விமுறை. இது ஸ்ரீ சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி என்று அழைக்கப்படும். சாயி பக்தர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, எல்லாப் பிள்ளைகளுக்கும் பயன்படும் முறையில் இக்கல்விமுறை எமது பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. எல்லா மதங்களின் அரிய கருத்துக்கள் பிள்ளைகளின் பாடநூல்கள் மூலமே கூறப்படுவதால் அதனை மிகவும் ஆரோக்கியமான முறையில் கல்வி உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதில், நாமும் நமது பங்கைப் பக்தி பூர்வமாக எம்மால் இயன்றவரை பணியாற்றுவது பலரும் அறிந்ததே.

பகவான் கூறுவார்:-

எந்தக் கல்வி முறையும் நன்மை, தீமை இவற்றைப் பகுத்தறிய வைக்க வேண்டும். பாவத்திற்குப் பயந்து, கடவுள் மேல் அன்பு வைத்து அடக்கத்தையும் பணிவையும் அனுசரித்து, அறிவை விருத்திசெய்து பக்தி பூர்வமாக தெய்வத்தை வணங்கி தான் பெற்ற ஆற்றல் மூலம் தனது பெற்றோர், கிராமம், சமூகம், நாடு, மொழி, தேசம் எல்லாவற்றிற்கும் சேவை செய்ய வைக்கவேண்டும்.

**பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)**
*ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி தேசியப் பணிப்பாளர்.*

இத்தகைய ஓர் உன்னதமான கல்வியை அறிமுகப்படுத்தியவர் சாதி, மத, நிற பேதமை பார்க்காது சேவைக்கு முதலிடம் கொடுத்த ஒரு தெய்வீகமானவரின் பிறந்த நாளை சாதி, மத, நிற, மொழி பேதமில்லாது கொண்டாடுவது ஆனந்தம் தரும்.

எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க!

# எல்லையற்றது தெய்வீகம்....!

அவதாரம் என்றால் கீழ் இறங்குதல் அதாவது தெய்வீகம் மானிட உருவில் முழுமையாக வருதல் என்று பொருள்படும். பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம் தர்ம ஸ்தம ஸ்தாபனாத் தாய ஷம்பவதமி யுகே யுகே

(கீதை அத்.4, சுலோகம் 8)

பக்தர்களைக் காக்கவும் கொடியவர்களை அழிக்கவும் தர்மத்தை ஸ்தாபிப்பதற்கும் யுகம்தோறும் அவதரிக்கிறேன் என்று கிருஷ்ண பரமாத்மா கூறியதற்கிணங்க அதர்மம் மேலோங்கி உலகத்தில் அழிவுகள் பெருகி பக்தர்கள் அல்லலுறும் போது ஆங்காங்கே தெய்வீக மனிதர்கள் தோன்றி வருவதை நாம் அறிவோம்.

எனினும், பாரத தேசத்திலே எண்ணுக்கணக்கற்ற மகான்கள், ஞானிகள் பல அவதார புருஷர்கள் தோன்றியுள்ளார்கள். நல்ல நிலத்திலே விழும் நீர் நன்னீராகவும் உவர் நிலத்தில் விழும் நீர் உவராகவும் இருப்பது போல நல்ல கலாசாரத்திலே பாரம்பரியத்திலே தான் இத்தகைய மகான்கள், ஞானிகள், அவதார புருஷர்கள் தோன்றுவதை அவதானிக்க முடிகிறது. மேற்குலகம் அன்றும் இன்றும் உடல்வலிமை, பொருளா வலிமைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆனால், மேற்குலகை அரசிய ஆதிக்கம் ஊடுருவல் பல நூற்றாண்டுகளாக இருந்தும்கூட இன்றும் பாரத மக்கள் மனதிலிருந்து முற்றாக ஆன்மீக உணர்வு விட்டுப்போகவில்லை.

இச்சந்தர்ப்பத்திலேதான் முற்றாக ஆன்மீகம் அழியாதிருக்கவும் மக்கள் மனதில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக சத்தியசாயி அவதாரம் தோன்றியுள்ளது.

பிரபஞ்சம் முழுவதும் தெய்வீகத்தின் வெளிப்பாடாக இருக்கின்ற பொழுதும் அதை உணர முடியாத அளவிற்கு இன்றைய மனிதனின் உள்ளத்தில் எதிர்மறையான தன்மைகள் நிறைந்துவிட்டன. அதனால்தான் இன்று மனிதன் தனது இயல்பான அமைதியையும் இழந்து பிறருடைய அமைதியையும் இழக்க வைக்கும் செயலில் ஈடுபடுவதோடு, இயற்கை அன்னையின் அழிவிற்கும் வித்திடுகின்றான்.

பிரபஞ்சத்தினது படைப்பின் இரகசியத்தையும் மனித வாழ்க்கையினது நோக்கத்தையும் அறியாத மனிதன் வசதியைத் தேட முயற்சித்து வசதியீனத்தால் அல்லலுறுகிறான். இன்பதைப் பெருக்க முனைந்து மீளமுடியாத துன்பத்திற்குள் சிக்கித் தவிக்கிறான். அபிவிருத்தி செய்வதாக எண்ணி செயற்பட்ட மனிதனாலேயே சூழல் மாசடைந்தலும் அதனால் உயிரினங்களுக்கும் ஏன் மனித உயிருக்கும் கூட உலைவைக்கும் செயலும் இடம்பெறுகிறது. இன்றைய மனிதனின் வாழ்க்கை அவன் கருதும் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

இன்பமும் துன்பமும் எமது விருப்பு வெறுப்பு எண்ணங்களின் விளைவே அன்றி வேறு எதுவுமல்ல. ஒன்றை விரும்புகின்றோம் என்றால் அடுத்ததை வெறுக்கின்றோம் என்பது தானே பொருள். எந்த அளவிற்கு ஒன்றை விரும்புகின்றோமோ அதே அளவிற்கு அடுத்ததை வெறுக்கின்றோம். இதன விளைவாக ஏற்படுகின்ற இன்பத்தின் அளவிற்கு ஒத்த துன்பம் அவனைத் தாக்கவிருக்கிறது. எனவே, துன்பம் கலவாத இன்பத்தை யாரும் அனுபவிக்கமுடியாது.

இன்றைய மனிதனின் வாழ்க்கை இன்பத்திற்கும் துன்பத்திற்குமிடையே ஊசலாடிக் கொண்டிருப்பதனால் வாழ்க்கையினுடைய நோக்கம் அடையப் பெறாது விடப்படுகிறது.

மனிதப் பிறவியின் நோக்கம் முத்தியே. விடுதலை அடைவதே.

'வருத்தப் பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் வாருங்கள், நிரந்தர இளைப்பாறுதல், தருவேன்' என்ற யேசுநாதரின் கூற்றும் நிரந்தர விடுதலையையே குறிக்கின்றது. "என்னிடத்தில் வாருங்கள்" என்றால் தெய்வீகநிலை அடையுங்கள் என்பதுதான பொருள்.

"யத்பாவம் தத்பவதி" எதை நினைகிறாயோ அது வாவாய் என்று வேதம் கூறுகிறது. எனவே நீ தெய்வீகத்தை இடையறாது நினைத்தால் தெய்வீகமாவாய்."

## ஆத்மசொரூபன்

'ஆன்மீகம்' என்பது அஞ்ஞானத்திலிருந்து முற்றாக நிறுத்துதல் ஆகும். அஞ்ஞானத்திலிருந்து முற்றாக நீங்கினால் பேறிவு சொரூபமாகிவிடுவோம் அப்போது ஏது துன்பம். எனவே இதை அடைவதற்கு எதிராக உள்ள தடைகளை நீக்குவதே வாழ்க்கையின் குறிக்கோளாக, செயற்பாடாக இருக்க வேண்டுமே தவிர துன்பம் கலந்த இனபத்தை தேடுவதோ அல்லது அபிவிருத்தி என்ற செயற்பாட்டில் இணங்குவதோ அல்ல.

"பறவைகள் விதைப்பதுமில்லை, அறுவடை செய்வதுமில்லை, தானியங்களைக் களஞ்சியத்தில் சேமித்து வைப்பதுமில்லை" என்ற யேசுநாதரின் கூற்றை சற்று நோக்குவோம். உயிரினங்களுக்குத் தேவையான அனைத்தையும் இயற்கை அன்னை அளித்திருக்கும் போது, அதை முறையாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டுமே தவிர ஏதோ அபிவிருத்தி செய்வதாக எண்ணி பேரழிவுகளை உண்டு பண்ணுவதல்ல. இவ்வாறே ஞானிகள் தீர்க்கதரிசிகள், யோகிகள் வாழ்ந்து பிறவியின் நோக்கத்தை எட்டினார்கள்.

மின் அடுப்பிலேற்படும் உஷ்ணமும், குளிர்சாதனப் பெட்டியில் ஏற்படும் குளிரும், மின்குமிழினால் காவப்படும் ஒளியும்... ஒரோ மின்சாரத்தின் வெளிப்பாடே. இதை அறிந்த ஒருவனால் தான் உஷ்ணத்தை விரும்பும்பொழுது உஷ்ணத்தையும், குளிரை விரும்பும் பொழுது குளிரையும் ஒரே மின்சாரத்திலிருந்து தருவித்துக்கொள்ள முடியும். இதே போலத்தான் இப்பிரபஞ்சத்திலேற்படுகின்ற நன்மை, தீமை என்று சொல்லப்படுகின்ற அனைத்தும் ஒரே தெய்வீகத்தின் வெளிபாடே என்று அறிந்தவனால்தான் மனித வாழ்வின் நோக்கமாகிய விடுதலைக்குத் தடையாயிருக்கின்ற தீமைகளென்று சொல்லப்படுபவைகளை நீக்கமுடியும். மனிதவர்க்கத்திற்கு வழி காட்டமுடியும்.

மாட்டிற்கு மாடு சொனனால் கேட்காது. மணிகட்டின மாடு சொன்னால் தான் கேட்கும்' என்ற முதுமொழிக்கிணங்க எல்லையற்ற தெய்வீகம் எல்லைப்படுத்தபட்ட மானுட உடம்பில் பிரவேசித்து மனிதகுலத்தை வழிப்படுத்த, நெறிப்படுத்த வந்த அவதாரமே சத்தியசாயி அவதாரமாகும்.

இந்த சத்தியசாயி அவதாரத்தைப் பற்றி தனது தொண்ணூறு (90) வருட வாழ்வின் பெரும் பகுதியை இம் மனித வாழ்வின் மர்மத்தை, பரமரகசியத்தை அறிய முற்பட்டு பல மதங்களின் தத்துவங்களையெல்லாம் ஆராய்ந்து இறுதியாக சத்தியசாயியிடம் பூரணமாகச் சரணடைந்த அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா என்னுமிடத்தைச் சேர்ந்த டாக்டர் ஜோன் ஹிஸ் லொப் இவ்வாறு கூறினார்.

"...கிருஷ்ணரோ, இராமரோ அல்லது யேசுநாதரோ, நபிகள் நாயகமோ தெய்வீக ஆற்றல் மூலம் பொருள்களை பெற்றதை நான் கேள்விப்படவில்லை. ஆனால், சத்தியசாயி எவ்வாறு செய்கிறார். இதற்கு என்ன அர்த்தம் என்று வியந்து கூறியுள்ளார்.

இத்தகைய, தெய்வீகத்தின் ஒட்டுமொத்தமான வெளிப்பாடாகிய அவதாரத்திற்கு ஏது பிறப்பு, இறப்பு. தெய்வீகம் மானிட உடம்பிற்குள் பிரவேசித்ததேயன்றிப் பிரசவிக்கப்பட்டதன்று. காலத்தைக் கடந்த தெய்வீகம் மனித குலத்தை வழிநடத்த வந்தது மனித குலத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். கண்ணிருந்தும் குருடராகாமல் விழித்தெழுவோம். காதிருந்தும் செவிடராகாமல் செவிமடுப்போம் விடுதலையடைவோம்.

# சாயி சிந்தனை

## என்னில் சரணடையுங்கள்



நீங்கள் ஏன் பதற்றம் அடைகின்றீர்கள்? உங்களது பொறுப்புக்களையும்,பிரச்சினைகளையும் என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்.

நான் ஒருவனே அவற்றைப்பெற்று சிந்திக்க முடியும். நீங்கள் என்னை சரணடைவதற்காகவே நான் காத்திருக்கின்றேன். முற்றுமுழுதாக நீங்கள் என்னை சரணடையும் போது மட்டுமே நான் உங்களது விடயத்தில் தலையிட முடியும். அதன் பின் நீங்கள் எதற்காகவும் கவலைகொள்ளத்தேவையில்லை.

உங்களது கவலை, பயம் மற்றும் அதைரியம் என்பன எல்லாவற்றுக்கும், பிரியாவிடை அளித்து விடுங்கள். என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை உள்ளது என்பதை நிரூபியுங்கள். சரணடைதல் என்பது உங்களது எல்லா நினைவுகளையும், பிரச்சினைகளிடமிருந்து ஒதுக்கிவைத்தலாகும். எல்லாக் காரியங்களும் நன்றே நடக்கும்.

எங்களுக்கு எல்லாமே நன்மையாக நடக்கும் என எண்ணி உங்களது எல்லாப் பிரச்சினைகளையும் எனது கரங்களில் ஒப்படைத்து விடுங்கள்.

உங்களுக்கு உயர்ந்த நன்மை விளைவிக்கக் கூடியதாக, நான உங்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன். விளைவுகளைப் பற்றிச் சிந்திப்பது சரணடைவதற்கான மார்க்கமாகாது. ஒரு பிரச்சினைக்கு நீங்கள் விரும்பிய விளைவு ஏற்படவில்லை என கவலைப்படாதீர்கள். இதன் மூலம நீங்கள் எனது அன்பை முழுமையாக நம்பவில்லை என்பதை நிரூபிக்கின்றீகள். அத்துடன், உங்களது வாழ்க்கை எனது கட்டுப்பாட்டில் உள்ளது என்பதையும் நீங்கள் உணரவில்லை. எது எப்படி நடைபெறப்போகின்றது. எவ்வாறு முடியப் போகின்றது என்பதைப் பற்றி நினைக்காதீர்கள். இவற்றை எல்லாம் நீங்கள் நினைத்துக் கொண்டு இருப்பீர்களாயின் நீங்கள் என்னை முழுமையாக நம்பவில்லை என்பதுதான் அர்த்தம். இவற்றை எல்லாம் நான் செயற்படுத்த வேண்டும் என நினைப்பீர்களாயின் நீங்கள் எதற்கும் ஆதங்கம் அடையாதீர்கள்.

நீங்கள் என்னை முற்றுமுழுதாக சரணடையும் போது நான் உங்களை வழிநடத்துவேன். எனது கரங்களில் நான் உங்களை தாங்கிச்செல்வேன்.

உங்களது கவலைகளும், எதற்கும் காரணங்களைத் தேடும் உங்களது எண்ணங்களுமே உங்களைக் குழப்புகின்றன.

நீங்கள் என்ன விலை கொடுத்தாவது இவற்றிலிருந்து விடுபட வேண்டும். உங்களின் எண்ணங்களும், செயல்களும், ஆதமீக சிந்தனைகளும் என்பால் திரும்பும்போது நான் உங்களுக்கு நிறையவே செய்யமுடியும். உங்களது கண்களை மூடிக்கொண்டு என்னைத் தியானித்துக் கொண்டு ஓய்வாக இருங்கள்.

நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கின்றேன். நீங்கள் முற்றுமுழுதாக என்னில் நம்பிக்கை வைக்கும்போது, என்னைப் பிரார்த்திக்கும் போது நீங்கள் எல்லாவற்றையும் பெறுவீர்கள்.

உங்களது நம்பிக்கையின் வெளிப்பாடாக நான் உங்களது காரியங்களில தலையிடுவேன். நீங்கள் என்னை முற்றுமுழுதாக நம்பாமல் உங்களது தேவைகளுக்கு ஏற்ப என்னைப் பயன்படுத்த நினைக்கின்றீர்கள்.

வைத்தியரிடம் நான் நினைத்த மருந்துகளைத் தரும்படி கேட்கும் நோயாளி போன்று நீங்கள் என்மீது நம்பிக்கை வைக்கின்றீர்கள். மாறாக, துக்கமான வேளைகளிலும் எங்களுக்கு எது நல்லதோ அதை முறையாக ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்த பிரார்த்தனை செய்யுங்கள். சில சமயங்களில் அழிவுகளும் கவலைகளும் குறைவதற்குப் பதிலாக அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. அதற்காக அதைரியப்படாதீர்கள். உங்களுடைய கண்களை மூடிக்கொண்டு என்னிடம் பிரார்த்தனை செய்யுங்கள். எல்லாம் நன்றாகவே நடக்கும். தேவையான போது நான் சில அற்புதங்களையும் நடத்திக் காட்டுவேன். நீங்கள் என்னை முற்றுமுழுதாக சரணடையும்போது மட்டுமே நான் அதை செய்து காட்ட முடியும். நான் எப்போதும் உங்களையே சிந்தித்துக் கொண்டு இருக்கின்றேன். நீங்கள் என்னிடம் முற்றுமுழுதான நம்பிக்கையை வைக்கும்போது மட்டுமே நான் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

*(புட்டபர்த்தியில் இருந்து பகவான் சத்யசாயி பாபவின் பிறந்த நாள் செய்தி)*

*(தகவல்: சுதாகரன்)*

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
Packed By: Royal Industries, Colombo. ☎ 0112334603

ROYAL GLUCOSE
ஏகவிநியோகத்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
சத்திரத்துச் சந்திக்கு அருகில்


## சிறுவர் விவரம் சேகரிப்பு

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் பெயர் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

சிறுவர் உரிமை மேம்பாட்டு நிறுவனத்தின் வேண்டுகோளின்பேரில் இந்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் வசதியாக விவரங்கள் திரட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-175)

## உழவு இயந்திரங்கள் கையளிப்பு

ஒவ்வொன்றும் பத்து லட்சம் ரூபா பெறுமதியான நான்கு உழவு இயந்திரங்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதன்படி அம்பன், சாவகச்சேரி, உரும்பிராய், புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்கள் உழவு இயந்திரங்களைப் பெறவுள்ளன. இது தொடர்பான நிகழ்வு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நாளை காலை நடைபெறும். யாழ். அரச அதிபர் நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் இவற்றைக் கையளிப்பார் என கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் தெரிவித்தார்.

'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த உழவு இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுடன் இழுவைப் பெட்டி, முட் கலப்பை, சட்டிக் கலப்பை என்பனவும் வழங்கப்படும் என்றும் - ஆணையாளர் தெரிவித்தார். (எ-6)


Hotel SEIVAMS
தலைநகரில் கடந்த 16 வருடங்களாக மிகவும் சிறந்த சேவை செய்யும் ஒரே ஸ்தாபனம் ஹோட்டல் சீவம்ஸ்
01. தனி அறை (Single Room)
02. இருவர் அறை (Double Room)
03. கொமட் வசதியுள்ள மலசல கூடங்கள்
04. குளிரூட்டப்பட்ட அறை (AirCondition Room)
மிகவும் சகாயமான கட்டணத்தில் வாடகைக்கு கிடைக்கும். இன்றே விஜயம் செய்யுங்கள்:
Hotel SEIVAMS
Guest House, 93, Vivekananda Hill, Colombo-13. Tel: 326522
(22498)



JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION
GRADUATION CEREMONY - 2003
for the 2nd Batch Students.
Time: On Sunday 23.11.2003 at 2.00 p.m.
Venue: Jaffna National College of Education
Chief Guest: Prof. S.Mohanathas
Vice-Chancellor, University of Jaffna.
All are welcome.
Dr.T.Kamalanathan. President. (C/31395) (26-11-15-25)
Mr.N.M. Pirapakaran, Co-ordinator, G.C.


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் பகுதித்தலைவர் திரு.சி.பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி லூசி சின்னத்தம்பி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்கு கொள்வதோடு, அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
(24975)(35-11-15-25))


தேவை
பயிலுநர் - வீட்டுத்தாதியர்
சிலிங்கோ கூட்டுத்தாபன வீட்டுத்தாதியர் பராமரிப்புச் சேவைக்குப் பயிலுநர் தேவை. க.பொ.த. (சாதாரண தரம்) சித்தி எய்திய, இந்தத் துறையில் ஆர்வமும் ஈடுபாடுமுள்ளவர்கள் உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் அலுவலக நேரத்தில் சமுகந்தரவும்.
வீட்டுத்தாதியர் பராமரிப்புச் சேவை,
173, ஸ்ரான்லி வீதி
(முதலாம் மாடி),
யாழ்ப்பாணம்.


## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### நீக்கிலாப்பிள்ளை சந்தியாப்பிள்ளை செல்வராசா

மலர்வு 23.05.1919 — உதிர்வு 23.11.1990

ஊர்போற்றும் உத்தமரே!
நீர் விண்ணுலகம் சென்றாலும்
நித்தமும் எம்முடனே இருக்கின்றீர்!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

S.அருள்நேசன் (மகன்)
மிருசுவில் வடக்கு,
மிருசுவில். (24981) (25-11-15)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தசாமி இராஜரட்ணம் பத்தர்



மலர்வு 27.06.1948 — உதிர்வு 03.12.2002

திதி: கார்த்திகை அமாவாசை (23.11.2003)

பிரியமாய் எமை வளர்த்து நல்வாழ்க்கை தந்தவரே!
பிரிய மனம் வந்ததா திடீர் பயணம் சென்று விட்டீர்?
அகிலமெலாம் போற்றி அதிசயிக்க வாழ்ந்தவரே!
அன்பின் திருவுருவே ஆறுதலைத் தாரீரோ?

84/3, தபாற்கந்தோர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (24979) (2511-15)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.


வடமாகாண விவசாயிகளுக்கு மண்வளம் பெருக்கி
ஜிப்சைற் - 60 பிளஸ் சலுகை விலையில்
Agricol's
GYPSATE-60 PLUS
மண்வளம், குன்றியது 1970-1975 காலப்பகுதியில் ஒப்பிடும்போது 45% வரை விளைச்சல் குறைந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.
A. செயற்கை இரசாயன உரங்கள்:- யூரியா, அமோனியா, பொஸ்பேட் போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பாவித்தமை.
B. போதியளவு இயற்கை உரங்கள்:- தாவர உரம், எருவகை, கூட்டெரு போன்றவற்றைப் பாவிக்கத் தவறியமை.
சிறந்த விளைச்சலுக்கு எல்லாமாக ஊட்டச் சத்துக்கள் கட்டாயமாக 12உம் தேவை.
அதிகவிளைச்சலைப் பெற என் பி.கே. (N.P.K) மட்டும் போதாது. கல்சியம் (Ca), மக்னீசியம் (Mg), கந்தகம் (S), உடன் 6 சுவட்டு மூலகங்களும் போரான் (B), செம்பு (Cu), இரும்பு (NI), பெரஸ் (Fe), மங்கனீஸ் (Mn), சிங்க் (Zn) ஆகியவை கட்டாயமாகத் தேவையென இந்தியத் தொழில்நுட்ப நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.
1988, 2002 ஆம் ஆண்டு மண்பரிசோதனையில் கிளிநொச்சி, மன்னார் ஆகிய வயல் நிலங்களில் மண் பரிசோதனை செய்த போது மண்ணில் உவர்த்தன்மை அமிலத் தன்மையுடன் மக்னீசிய பற்றாக்குறையும் இரும்புச்சத்து செறிவும் (iron.toxide) அநேகமான வயல்நிலங்களில் காணப்பட்டன.
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர தூயஜிப்சம் (98.6%) Minaral Gypsum உடன் மக்னீசியம் (கொழும்பு கோமோஷல் கொம்பனியால்) சேர்ந்து தயாரிக்கப்பட்ட
GYPSATE-60 PLUS (9சத்துக்கள் அடங்கியுள்ளன)
(Ca 19%, Mg7%, S.27%+9T.E)
இழந்த விளைச்சலை மீண்டும் பெற மண்வளம் பெருக்கி
ஜிப்சைற் - 60-பிளஸ்
நெல் வயலில்:- இரண்டாவது உழவில் அல்லது கடைசி உழவில் ஏக்கருக்கு 1 ½ அந்தர் (75கி.கி) பாவிக்கவும்.
மேட்டுநில பயிர்களுக்கு:- இரண்டாவது உழவில் அல்லது கடைசி உழவில் ஏக்கருக்கு 1அந்தர் (50கி.கி) பாவிக்கவும் - இதன்மூலம் அமிலம், உவர் இரும்புச்சத்துச் செறிவை வெளியேற்றி மக்னீசியப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம்.
1988, 1989 காலப்பகுதியில் வடமாகாணத்தில் அதிக அளவு (1) Mg.S.UREA (2)Mg S T.D.M பாவனையில் இருந்தன. விவசாயிகள் நல்ல பலனை அடைந்தனர்.
யாழ்ப்பாணத்தில் கையிருப்பாளர்: பவானி ஸ்ரோர்ஸ், நீர்வேலி.
விற்பனையாளர்:- T.துரைராஜா அக்றிகோலாஸ் ஏஜென்சி, மயிலியதனை, தொண்டமானாறு.
வன்னியில் கையிருப்பாளர்:-
பசுமை வேளாண் சேவை,
கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு (எல்லா 14 கிளைகளிலும்)
சலுகைவிலையில் யாழ்ப்பாணத்தில் :- 50kg 610/= 25kg 325/=
வன்னியில் :- 50kg 600/= 25kg 315/=
சந்தைப்படுத்துபவர்கள்:- அக்றிகோலாஸ் 46, பழைய சோனக தெரு, கொழும்பு-12.
தொடர்புகொள்ள:- K.G.சம்பந்தர் ☎ 232 5577 (கிழமை நாள்கள்) 0777 624580 (சனி, ஞாயிறு)
(C/31840)


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்


தோற்றம் 10.08.1924 — மறைவு 04.12.2002

ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள் அழகுமுகம்
எங்கள் நெஞ்சைவிட்டு ஒருபோதும் மறையாது
என்றும் உங்கள் நினைவுடனேயே நாம்
- இப்படிக்கு
தவிப்புடனேயே கண்ணீருடன் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

18, வைத்தியசாலை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.




# அன்றே காசு

வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புவதற்கு மிகவும் இலகுவான, குறைந்த செலவிலான, அதிக பாதுகாப்பான முறை டோ டு டோ எக்ஸ்பிரஸ்.

இதனால் வெளிநாட்டில் வேலைபார்க்கும் பெரும்பான்மையோர் டோ டு டோ எக்ஸ்பிரஸ் மூலம் பணம் அனுப்புகிறார்கள்.

இப்போது டோ டு டோ எக்ஸ்பிரஸ் முன்னரை விட முன்னேறி, அதி வேகத்துடன் செயற்படுகிறது.

வெளிநாட்டில் இருந்து அனுப்பும் பணம் இப்போது மிகவும் இரகசியமாக அன்றே கைவந்து கிடைத்து விடுகிறது.

**Door to Door EXPRESS**

வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணம் அன்றே பாதுகாப்பாக கிடைக்கும்

**இலங்கை வங்கி**
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கியில் அல்லது தலைமை அலுவலகத்தில் திலக் அழகியவன்ன 2445792 அல்லது உபாலி ரணசிங்க 2471616 அல்லது லக்சிறி விஜேரத்தின 2541933 உடன் தொடர்பு கொள்ளவும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள முச்சக்கர வண்டி (ஓட்டோ) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.விநாயகமூர்த்தி, இராசவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் (இராச வீதி தாயகத்துக்கு அருகில்). (24969)

இல.73, கோயில் வீதியில் வீட்டுடனும் கிணற்றுடனும் 6½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.மகேந்திரராஜா, மே/பா சிவம், 24, அத்தியடி, புதுவீதி, யாழ்ப்பாணம். 23-11-2003 காலை 11.00 மணிக்கு சந்திக்கலாம். (24972)

யாழ்ப்பாணம் மாட்டின் ஒழுங்கையில் நவீன வசதிகளுடன் 4 அறைகள்கொண்ட (நாலுபக்கச் சுவர்களுடனும் நல்ல தண்ணீக் கிணற்றுடனும்) மேல்மாடி கட்டக்கூடியநிலையில் புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P 222 6563 அல்லது நேரில் வரவும். (24963)

8′ டிஸ் அன்ரனா (USA Mesh Dish) Receiver E-Box Digital 9700P LNBF Supermax விற்பனைக்குண்டு தொடர்பு இல.30, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (24989)

தரமான எங்களது சொந்த முட்டைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (24987)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg 130/= சுத்தம செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:3529, 2867. (24934)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg140/-. சுத்தம செய்தது 1Kg 220/-. வேண்டிய அளவுகளில் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (24947)

புறொயிலர் 1Kg 140 மற்றும் கல் பேட்ஸ், சேவல் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம்செய்தல் இலவசம். தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (24834)

புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தேறிய நிறை 1kg 220/- மட்டும். வெள்ளி தவிர்ந்த ஏனைய நாளகளில் பகல் ஒரு மணி வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு S.குமரன், 227, பிறவுண் வீதி (நரிக் குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (24950)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும பெறுக கொள்ளலாம் (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24988)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் ரூபா 50/= அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் ரூபா 65/= என்பன 24.11.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (24876)

## வாடகைக்கு

திருமணசேவைக்கு மட்டும் பயன்படுத்தக் கூடிய New Model (2000 Model) வெள்ளைக்கார் வாடகைக்கு உண்டு. தொடர்பு:0777-118880, 021 2226404. (24936)

## வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர்கொண்ட குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு திருநெல்வேலி, கந்தர்மடம் பகுதியில் வாடகைக்குத் தேவை. தொடர்பு: ஆர். மனிவண்ணன் T.P 222 2782 (24796)

## திருமண சேவை

1961, உத்தரட்டாதி செவ்வாய் 4, U.K. Engineer இந்து படித்த, அழகான மணப்பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். விவாகரத்துப் பெற்றவர்களும விண்ணப்பிக்கலாம். சீதனம் முக்கியமில்லை. தொடர்பு: துரைவிமலா இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (24580)

## மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க, ஜேர்மனி பிரஜாவுரிமைபெற்ற, 40 வயதுடைய, விவாகரத்துப் பெற்ற, மணமகனுக்கு பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பி வைக்கப்படும். வி.இல.2095, C/o உதயன். (24744)

யாழ்.இந்து கௌரவ (மிகச் சிறந்த பண்புகளமைந்த) அரச வைத்திய நிபுணரான (Consultant) மணமகனுக்கு பெற்றோர் டாக்டர் அல்லது வேறு பட்டதாரி மணமகளை 33 வயதுக்கு மேற்படாமல்) எதிர்பார்க்கின்றனர். சாதகம், தொலைபேசி இருப்பின் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல.2103, உதயன், யாழ்ப்பாணம். (24962)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976ஆம் ஆண்டு, பூச நட்சத்திரத்தில் பிறந்த, 2இல் செவ்வாயுள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். குறிப்பு மற்றும் சுய விவரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2102, மே/பா உதயன். (24951)

## வீடு வளவு விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கில் சிவசக்தி கோவிலுக்கு அண்மையில் காலியாகவுள்ள வீடுவளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அச்சுவேலி தெற்கில் - குமரையா நித்தியானந்தன், கொழும்பில் நடராஜா T.P. 01 2592381. (31432)

## தவறிவிட்டது

சிவராஜசிங்கம் சங்கீதா என்பவரது விசேட அடையாள அட்டையும் வங்கிப் புத்தகமும் வைத்திய சாலைக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் Jegan photo 399, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். T.P 3552. (24957)

நடராசா தர்மலிங்கம் என்பவரது தேசிய அ.அ.(452910993V) யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 52/6, ஈச்சமோட்டை வீதி, ஈச்சமோட்டை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (24980)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஸ்தாபனத்திற்கு காசாளரும், விற்பனையாளரும் தேவை.

கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.2097 மே/பா உதயன் (24881)

## ரெயிலர் தேவை

ஆண்களுக்கான ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்களும், பெண்களுக்கான ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்களும் தேவை.

தொடர்பு, இல. 91, கண்டி வீதி,சுண்டிக்குளி (24905)

## தேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்து வாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விவரங்களுக்கு 0777 871617 தொலைபேசி எண்ணுக்கு அழையுங்கள்.

பாலா
தெஹிவளை

## வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணைக்கும், மூடைகள் பறிப்பதற்கும் ஆள்கள் தேவை. தங்கியிருத்தல் வேண்டும். நல்ல உணவும், சம்பளமும், ஊக்குவிப்புப் பணமும் (Commission) வழங்கப்படும். உடன் நேரில் வரவும்.

க.தனபாலசிங்கம்,
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
19,முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தையடி,
நல்லூர்.

(35-21-14-18) (24986)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கயிலாயபிள்ளை

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களம்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா கயிலாயபிள்ளை அவர்கள் நேற்று (22.11.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் தங்கரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் அன்பரசி (ஜேர்மனி), அழகிரி (ஜேர்மனி), அபரஞ்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரமணன் (ஜேர்மனி), நிர்மலா (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகணநாதன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராசரத்தினம், குமரேசு, விசுவலிங்கம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி இராசசுந்தரம், குலநாயகம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சிவசம்பு பாலசிங்கம் அவர்களின் சகலனும் சர்மிலன் (ஜேர்மனி), சாம்பவி (ஜேர்மனி), கார்த்திகன் (ஜேர்மனி), அபிநயா (ஜேர்மனி), கயப்பிரியா, திவாகரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணிக்கு தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.அழகிரி (மகன்)

செட்டிவளவு ஒழுங்கை
இணுவில் மேற்கு, இணுவில். (24993)(35-14-18-21)

## கதிர்காமு கிருஷ்ணன்

(முறிவு, நெரிவு வைத்தியர் - மீசாலை வடக்கு, புத்தூர்ச்சந்தி)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கிருஷ்ணன் 19.11.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2003) ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, புதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
கி.பிரபாகரன் (மகன்)
சி.பவனேந்திரன் (மருமகன்)

மீசாலை வடக்கு கொடிகாமம். (24976)(35-14-18-21)

# இனிய தமிழே! எங்கள் தமிழினியே!



எங்கள் குடும்பம் எழுந்து நிமிர்கையிலே
அங்கே விளக்கேற்றி அழகுசெய்ய எண்ணியதால்
தலைமகளாய் வந்து தமிழாக இனித்தவளே,
அண்ணாமார் நால்வர்; அவர்க்குப் பின், முதலாக
பெண்ணாகப் - பொன்னாகப் - பூவாக வந்தவளே
கண்ணால் சிரித்து கரும்பு மொழி பேசி
சின்னஞ் சிறு காலால் அன்ன நடைநடந்து
நீ சிரித்து வளர்கையிலே எம்வீடே சிரித்ததம்மா!
சிரிக்கச் சிரிக்க நீ செல்லக் கதைபேசி
இருந்த அக் காலம் இப்போது எம்நெஞ்சில்
உயிர்த்தெழுந்து வந்து உணர்வைக் குடிக்குதம்மா!
கல்விக் கழகத்தில் கற்பதற்கு முன்பே நீ
நல்ல பழக்கங்கள் நயமான சொல்லாடல்
எல்லாமே இயல்பாக எடுத்ததனால் எல்லோர்க்கும்
செல்லச் சிறு மலராய் சிறப்புடனே வளர்ந்தவளே
கல்வி பல கற்றாய்; கலைகளையும் கைக்கெடுத்தாய்,
கவிதை மலர்கூட உன்கைகளிலேயே மொட்டவிழ்க்க
கற்றவர்க்கும் உற்றவர்க்கும் கண்ணின் மணியானாய்!
பாசத்தைப் பிழிந்து பகுத்தறிவை அதிற்கலந்து
ஆசையாய் ஊட்டியுனை அன்பாக நாம் வளர்த்தோம்.
நீயும்...
எல்லாம் தெரிந்திருந்தாய்; எமனேதான் வந்தாலும்
நல்லாய் எதிர்கொள்ளும் நாவன்மை பெற்றிருந்தாய்!
என்ன இருந்தென்ன?...
அன்றொரு நாள் ... உன்னை நீ மறந்த அந்த நாள்...
இரண்டா யிரத்து இரண்டா வதுஆண்டின்
நம்மை வருத்தவந்த நவம்பராம் திங்களிலே
இருளாகி வந்த இருபத்து மூன்றாம்நாள்
அன்று...
நீ,
இயல்பான பண்பையெல்லாம் எங்கே இழந்து நின்றாய்?
எண்ணற்ற அறிவையெல்லாம் எங்கே தொலைத்திருந்தாய்?
வேட்டைக்குத் திட்டமிட்டு வேடம் புனைந்தவர்கள்
புள்ளிமான் தோல்போர்த்த புரட்டு நரிக்கூட்டம்
உன்னை மயக்கநீ உருக்குலைந்து போனாயே
தன்னை மறந்தாய் தன்நாமம் நீகெட்டாய்
எங்கள் மேல் வைத்திருந்த ஈடற்ற பாசமதை
ஏன்மறந்து போயிருந்தாய், எங்கள் தமிழினியே!
எங்கள் இதயத்தில் இருந்த துடிப்புகளை
அன்பான செய்கைகளை, அறிவார்ந்த வார்த்தைகளை...
எல்லாமே மறந்துநீ இருளுக்குள் போனதென்ன!
படித்த படிப்பும் பகுத்தறிவுச் சிந்தனையும்
"அந்த" ஒரு கணத்தில் அவமாகிப் போனதென்ன?
இனிய தமிழே, எங்கள் தமிழினியே,
நீ...
உன்னை இழந்தாய்;
நாங்கள்...
இதயத்தை இழந்து இங்கே இருக்கின்றோம்.

**அப்பா: வேலணை வீரசிங்கம், அம்மா: அன்னலெட்சுமி (அமரர்)**
**அண்ணன்மார்: குறளரசு, வேழவேந்தன், ஈழகாந்தன், இளங்கோவன்**
**தங்கை: இளவரசி மற்றும் உறவினர்கள்.**

"தமிழ்மனை" வேலணை 05. / "பிறவுண்சன்" கொழும்பு 11.

පුනරුත්ථාපනය, නැවත පදිංචි කිරීම සහ අනාථවූවන් පිළිබඳ අමාත්‍යාංශය
புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சு
MINISTRY OF REHABILITATION, RESETTLEMENT & REFUGEES

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

20.11.2003

# அறிவித்தல்

புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சு மூலமாக வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு.

இன்று வரை எமது அமைச்சுக்கு சொத்து இழப்பு தொடர்பான நட்டஈடு கோரி **31,364** விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் **21,664** விண்ணப்பங்கள் பரீசிலிக்கப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவுக்காக தயார் நிலையில் உள்ளன்.

இந்த கொடுப்பனவுகளை செய்வதாயின் எமக்கு **1,315** மில்லியன் ரூபா உடனடியாக தேவை. இதுவரை கிடைத்த சகல விண்ணப்பங்கள் முழுவதற்குமான நட்டஈடு வழங்குவதாயின் **1,938** மில்லியன் ரூபா மொத்தமாக தேவைப்படுகிறது.

மேற்படி இந்த தொகையினை பெறுவதற்கான நடவடிக்கையினை அமைச்சு மூலமாக நான் மேற்கொண்டுள்ளேன். இது பற்றி அமைச்சரவைக்கு விண்ணப்பித்துள்ளதோடு கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஆலோசனைக்கமைய சர்வதேச உதவி வழங்கும் நாடுகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளேன். இந்த நிதி கிடைக்கப் பெற்றதும் உரிய விண்ணப்பதாரிகளுக்கு நட்டஈடு உடனடியாக வழங்கப்படும்.

**2002** ம் ஆண்டு மற்றும் **2003** ம் ஆண்டுகளில் நட்டஈடாக வழங்கவென எமது அமைச்சுக்கு மொத்தமாக **125.3** மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இத்தொகை முழுவதும் முழுமையாக நட்டஈடாக விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் நிதி கிடைக்கும் போது நட்டஈடு வழங்குதல் தடையின்றி மேற்கொள்ளப்படும்.

**பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன**
அமைச்சர்
புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சு.

හතරවන මහල, අංක 14, ශ්‍රීමත් බාරොන් ජයතිලක මාවත, කොළඹ 01.
நான்காம் மாடி, இல. 14, ஸ்ரீமத் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01.
Fourth floor, 14, Sir Baron Jayathilake Mw., Colombo 01.
කාර්යාලය / அலுவலகம் / Office: 2542829
ඊමේල්, ஈ-மெயில், E-mail : secmdrrn@sltnet.lk
අමාත්‍ය, அமைச்சர், Minister : 2382060
Web : www.rehabsrilanka.org, www.drjj.org
ලේකම්, செயலாளர், Secretary : 2382068
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 2382066


AMPL
Quality Assurance
தரம் மிகு சமையற்கலையின் வடிவம்
ஒவ்வொருவருக்கும் சுவையான சமையலை அருந்த ஆசை. ஆனால் சுவையான சமையலை சமைக்க ஏன் தயக்கம். சுவையான சமையலை நீங்களும் சமைக்க, கையாள்வதற்கு இலகுவானதும் பாதுகாப்பானதும், இத்தாலியின் வடிவங்களையும் தொழில்நுட்பங்களையும் ஒருங்கே கொண்ட பிறஷர் குக்கர், பிளென்டர், ஃபூட் புரொஸசர், நொன் ஸ்டிக் பாத்திரங்கள் மற்றும் காஸ் குக்கர்கள் என்பனவற்றை காஞ்சன் உங்களுக்கு வழங்குகின்றது.
KANCHAN
ஒரு தரமான சமையல் அனுபவம்
pressure cookers, gas cookers, non-stickware, toasters, food processors, water filters
இலங்கைக்கான ஏக முகவர்கள்:
ஏசியன் மார்கட்டிங் பிறைவேட் லிமிட்டட்.
12, ஹல்ஸ்டொப் வீதி, கொழும்பு 12. தொலைபேசி: 2448226, 074-712557.
கிளை: 129, டாம் வீதி. தொலைபேசி: 2473358
நாடுமுழுவதும் உள்ள விநியோகத்தர்களிடமும் மற்றும் ஆர்பிகோ காட்சியறைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணத்துக்கான ஏக முகவர்:
JAFFNA ELECTRICALS
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.222 5766
06 (94), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.222 2353

## பட்டநிறைவு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியி யற் கல்லூரியில் மூன்று வருட தேசிய டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான பட்டநிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், அதிபர்கள் சங்கத் தலைவர் எஸ்.சேதுராசா சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-ரி)

## சமூகக்கல்வி போட்டி

நாடு முழுவதும் பாடசாலைகளுக் கிடையில் இன்று இடம்பெறும் சமூகக்கல்வி அறிவுப் போட்டித்தொடரில் யாழ். மாவட்டத்துக்கான போட்டி வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நான்கு பிரிவுகளாக இடம்பெறும் இந்தப் போட்டியில் வலயங்களில் இருந்து பங்குபற்ற தெரிவுசெய்யப் பட்ட மாணவர்களை குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகம் அளிக்குமாறு யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார். (ஐ-3)


**PIANO TUNING**

Jaffna Area Piano Tuning Repair by A.S.De Alwis (Piano Tuner Technician) late of M/S Ephraums Bros,

Contact ,T.P: 2713600

(C/31423)



**யூரியா விற்பனைக்கு**

யூரியா உரம் விற்பனைக்குண்டு

தொடர்பு :-

S. கிருஸ்ணமூர்த்தி,
S.K.AGENCY
இல: 128 D,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.



**விற்பனைக்கு**

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். TELESONIC, RIKON, PACIFIC, USHA and SUNDA வகையில்: FANS, TOASTERS, IRONS, GAS COOKERS, BLENDERS, CLOCKS, RICE COOKERS, WASHING MACHINES, FOOD JARS, TELEVISIONS, CEILING FANS, MEGA VACUUM FLASKS இன்னும் பலதரப்பட்ட உபகரணங் களும் உண்டு.

IZZY ENTERPRISE
164/1, PRINCE STREET, COLOMBO - 11.
T.P: 075 354304, FAX: 437843


## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 - 05 - 1945



மறைவு 08 - 11 - 2003

# குணரட்ணம் குணநாதன் (குரு-கலட்டி)

(முன்னாள் முகாமையாளர். மக்கள் வங்கி. பிரதான வீதி. யாழ்ப் பாணம்.
உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி. இரத்மலானை)

08.11.2003 அன்று இறைபதமெய்திய குணரட்ணம் குணநாதன் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடி வந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலமும் தொலைதந்தி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும், பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

இல.: 60, 3/3,
உருத்திரா மாவத்தை,
கொழும்பு - 06.

- குடும்பத்தினர்.
T.P.: 071-4811030




**கார்த்திகைக்குமார் - சுனித்தா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் "சியாநந்"**

தனது முதலாவது பிறந்த தினத்தை 19.11.2003 அன்று இல. 05, அம்பலவாணர் வீதி, உடுவிலிலுள்ள "சியா இல்லத்தில்" வெகு விமரிசையாக கொண்டாடினார்.

இவரை அன்பும், ஆசையும் மிக்க அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, உதி சித்தப்பா (ஜேர்மன்), றூபி சித்தி, நந்தன் சித்தப்பா (கனடா), சுகி பெரியம்மா, ஜெயந்தன் மாமா, பவானி அத்தை, கிருண்யா மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எங்கள் குலதெய்வமாகிய சிவபூதவராயர் அருள் பெற்று சகல சௌபாக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல் : அம்மம்மா, பெரியம்மா.


**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த
அல்பம் (தினசரி)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இந்த
DOUBLE JEOPARDY

**லஷ்சுமி சினிமா** இணுவில்

ரஜனி, மீனா,
கவுண்டமணி, செந்தில் நடித்த
எஜமான் (தினசரி)
10.30, 2.30, 6.30. (பு.நே.)

**லிபேட்டி** அச்சுவேலி

சரத்குமார், தேவயாணி,
வடிவேல், மணிவண்ணன்
நடித்த
ஒருவன் (தினசரி)
காட்சி நேரம்: 3.00, 7.00.

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று மட்டும்
இளைய தளபதி விஜய்,
ஜோதிகா, கிரண்,
விவேக் நடித்த
தினசரி காட்சிகள்
1.00 3.00 7.00 (பு.நே.)
நாளை முதல்
பார்த்திபன் கனவு




**ராஜா** யாழ்ப்பாணம்

அஜித், மீராஜஸ்மின்,
கபாலி
மற்றும் பலர் நடித்த
ஆஞ்சநேயா
காட்சிகள்:10.30,2.30,6.30,9.30(பு.நே.) (தினசரி)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY சிவஸ்ரீ சோதீஸ்வரக் குருக்கள் சரணகீர்த்தன்

23.11.2003



ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த
திரு.திருமதி சிவஸ்ரீ
சோதீஸ்வரக்குருக்கள் - நந்தினி
தம்பதிகளின் சீமந்த புத்திரன்

**சரணகீர்த்தன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (23.11.2003) தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, பங்குஷன் பெரியப்பா குடும்பம், லண்டனில் இருக்கும் ரவி மாமா குடும்பம், அராலியில் இருக்கும் தாத்தா, அம்மம்மா, குமார் பெரியப்பா குடும்பம், ஜெனா மாமா, சங்கர் மாமா, கொழும்பிலிருக்கும் பெரிய மாமா குடும்பம், கண்ணன் மாமா குடும்பம், மோகன் மாமா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் அருளும், கோண்டாவில் ஸ்ரீ சபரீச ஐயப்பனின் அருளுடனும் பல்கலையும் பெற்று சீரும்சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (24992) (26-17-18)

திரு.திருமதி சிவஸ்ரீ மு.கிருஸ்ணசாமிக்குருக்கள்.
ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம்.

## பிரிவுபசார விழா



கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக உயரப்புலம் கிராமசேவையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும்

**திரு.மு.பூ.சிவபாதசுந்தரம்**

அவர்கட்கு பிரிவுபசார விழா

| | |
|---|---|
| இடம் | :- உயரப்புலம் பாரதி சனசமூக நிலைய மண்டபம் |
| காலம் | :- இன்று (23.11.2003) ஞாயிறு பிற்பகல் 3.00 மணி (புதிய நேரம்) |
| தலைவர் | :- திரு.ஆ.சி.கணேசவேல் (J.P.) (தலைவர், பாரதி சனசமூக நிலையம்) |

*பல பெரியார்கள் ஆசியுரைகள், பாராட்டுரைகள் வழங்குவார்கள்.*

குறிப்பு: இவ்விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.விநாயகமூர்த்தி அவர்களும் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்தினர். ஆனைக்கோட்டை.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் சண்முகலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சண்முகலிங்கம் நேற்று (22.11.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லாச்சியின் அன்பு மகனும் கணேசரத்தினம் - நல்லம்மாவின் மூத்த மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் மதிவதனி, மயூரன் (பிரான்ஸ்), தேவமுகுந்தன் (யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம் முதலாம் வருடம்), ஷேசகோபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனதாஸின் (கனடா) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற ராசலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், மகாலிங்கம், ராஜேஸ்வரி, ரத்தினேஸ்வரி, சரஸ்வதி, கனகமணி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கதிர்காமசோதி, பாலசுப்பிரமணியம், விக்னராஜா, செல்வராஜா, ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, திருமதி அ.இராசேந்திரம் (ஐங்கரன் புந்தல்), திருமதி அ. விஜேந்திரன், திருமதி ஜெ.தயாபரன், திருமதி சி.ரங்கநாதன், திருமதி க. இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (25005)(31-13-16)

தகவல்:
மு.சண்முகம் (சகலன்).

## வல்லிபுரம் ஜோன் தேவபாலச்சந்திரன்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் 135, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஜோன் தேவபாலச்சந்திரன் நேற்று (22.11.2003) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் தவபாக்கியம் (தவம்) அவர்களின் அன்புக் கணவரும் ஜெயரஞ்சித் (தேசிய சேமிப்பு வங்கி - கிளி.), ஜெயரஞ்சினி (கல்முனை), ஜெயரஞ்சன், ஜெயசுதன் (மாணவ முதல்வன், யாழ். மத்திய கல்லூரி), ஜெயராம் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அகலியா, செல்வேந்திரா ஆகியோரின் மாமனாரும் கிரிஸ்ரினா சலோமியின் பேரனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (24.11.2003) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோட்டடி பெந்த கோஸ்தே சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*135, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (24982)(31-13-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## மயில்வாகனம் பாலகுமார் J.P.

(முன்னாள் ஊழியர், உதயன்)

சுன்னாகம், மயிலணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாலகுமார் 19.11.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற முத்துக்குமார் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் ஆருயிர்க் கணவரும் தர்ஷினி, சாந்தினி, கமலினி, (Canada), சிவசங்கர் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற வாமதேவா (B.O.C), மீனலோஜினி (Canada), காலஞ்சென்ற வனஜலோஜனியின் அன்புச் சகோதரனும் சரஸ்வதியின் பெறாமகனும் ரஞ்சித், தவபாலன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும் தாரணியின் (Canada) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.11.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

3½, Harischandra Mawatha,
Pamankada, Colombo - 06
2-588526, 2-554339 (C/31442)(35-13-16-31)

தகவல்:-
மனைவி பிள்ளைகள்.

## திருமதி பூரணம் வல்லிபுரம்

தொட்டிலடி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் வல்லிபுரம் 20.11.2003 வியாழனன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், இரத்தினம், சின்னத்துரை மற்றும் இராசமணி, தவமணி, தவபோகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னராசா, இராசமலர், யோகமலர், பாலச்சந்திரன், தேவராசா, ஞானசேகரம் (டென்மார்க்), சந்திரசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, கந்தசாமி, நடராசா, சந்திரா, சாந்தி, ரதி (டென்மார்க்), லதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் வடக்கு,*
*சுன்னாகம்.* (25007)(31-13-16)

தகவல்:
வ.தேவராசா (வவி-மகன்).

# மாவீரர்தின நிகழ்வுகளை குழப்பும் படையினரின் செயலுக்கு கண்டனம்

## மாவீரர் எழுச்சிநாள் ஏற்பாட்டுக் குழு அறிக்கை

குடாநாட்டில் மாவீரர்தின நிகழ்வுகளை குழப்புவதற்காக படையினர் மேற்கொண்டுவரும் செயல்கள் கண்டனத்துக்குரியன என மாவீரர் எழுச்சி நாள் யாழ்.மாவட்ட ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

படையினரின் இத்தகைய செயற்பாடுகளின் மூலம் அரசியல் பேச்சுக்களில் சிறிலங்கா அரசு கொண்டிருக்கும் நிலைப்பாடு தொடர்பாக தமிழீழ மக்களாகிய நாம் சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளது. ஒருபுறம் சமாதானம் எனவும், மறுபுறம் சிறிலங்கா அரசு படையினரை ஏவிவிட்டு தமிழ்மக்களின் தேசிய எழுச்சி நாளை குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதும் அரசின் சமாதானம் தொடர்பான கபடத்தனமான செயற்பாட்டையே காட்டி நிற்கிறது.

இன்றைய சமாதான சூழ்நிலையிலும் நாங்கள் சுதந்திரமான முறையில் எமக்காக தம்மை தியாகம் செய்தவர்களின் நினைவுகளைக் கொண்டாட அரச படையினர் முட்டுக்கட்டை போட்டு நிற்கின்றனர்.

மாவீரர்தின வளைவுகளை கட்டவிடாது மறிப்பதிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகளை பறக்கவிடாது தடுப்பதிலும் மக்கள் எழுச்சி நிகழ்வுகளில் பெருந்திரளாக பங்குபற்றுவதை தடுப்பதிலும் மிக மும்முரமாக படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களாகிய நாங்கள் சிறிலங்கா அரச படையின் அற்பத்தனமான அடக்கு முறைகளைக் கண்டு அடங்கி விடமாட்டோம் என்பதனை அரசிற்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துரைக்க இம்மாவீரர் தின நிகழ்ச்சிகளில் எழுச்சி கோலமாக பங்குபற்ற வேண்டிய கடமைப்பாடு எம் எல்லோருக்கும் உண்டு - என்றுள்ளது.(ம-3)

### பாதுகாப்பு அமைச்சுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈ.பி.டி.பி. திம்பிரிகஸ்யாயவில் 50 கோடி ரூபா சொத்து வாங்குவதற்காக வங்கியில் பெற்ற கடனுக்கு ஜனாதிபதியே பிணைக்கு கைச்சாத்திட்டுள்ளார். இந்தக் கடனை எப்படி அவர்கள் திருப்பிச் செலுத்தப் போகின்றார்கள் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி. என்.ரவிராஜ் கேள்வி எழுப்பினார்.

அமைச்சர்கள்களான கரு ஜயசூரிய, இம்தியாஸ் பாக்கீர்மாக்கார், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் யாழ். குடாநாட்டின் சில அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டனர். புனர்வாழ்வு அமைச்சு எதுவித வேலைகளையும் செய்யவில்லை. அகதிகளாகிய மக்கள், படிவங்களை நிரப்பி நிரப்பி கைரேகை அழிந்த நிலையில் இருக்கின்றனர். யாழ். மக்கள் நிவாரணங்களை பெறவிரும்பும் சோம்பேறிகளல்லர். உழைத்து வாழக் கூடியவர்கள்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களையும் பாருங்கள். எதுவித அபிவிருத்தியும் இதுவரை அந்த பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படவில்லை.

நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதற்காகவே ஓரணியில் திரண்டு நிற்கின்றோம். இந்த இனப்பிரச்சினை தீர வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருகின்றோம். (ம)

### மாவீரர் தின....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆயுதங்களைக் கொண்டு செல்லாத வரை எந்தவித அச்சுறுத்தலோ பாதுகாப்புப் பிரச்சினையோ வரும் என்று கருதவில்லை - என்றார் அவர்.

### அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட ஜி.சீ.ஈ. (உயர்தர), ஜி.சீ.ஈ. (சாதாரண) வகுப்புக்கள் இடம்பெறும் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூடடம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என்று வலயப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-3)

### புத்திரசிகாமணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எம்.பியான இவர், ஜனாதிபதி மீது அதிருப்தி கொண்டு, அந்த முன்னணியின் பகுதியில் இருந்த வெளியேறி கூட்டமைப்பினரின் ஆசனப் பகுதியில் அமர்ந்துள்ளார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று அவர் உரையாற்றினார்.

அச்சமயம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜகத் புஷ்பகுமார, எக்கட்சியின் நேர ஒதுக்கீட்டில் புத்திரசிகாமணி பேசுகிறார் எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்க் கூட்டமைப்பினரின் நேர ஒதுக்கீட்டில் அவர் உரையாற்றுவதாக குழுக்களின் தலைவர் பதில் அளித்தார்.

அதை ஏற்கமுடியாது என அவர் ஆட்சேபித்தார். அந்த ஆட்சேபத்தை குழுக்களின் தலைவர் நிராகரித்தார்.

## சைவச் சிறுவர் இல்ல விவகாரம்:

# குற்றச்சாட்டுக்களில் இருந்து சக்திகிரீவன் விடுவிக்கப்படுவார்

கைதடிச் சைவச்சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான வழக்கில் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பில்லை எனத் தெரிவித்து இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் விடுவிக்கப்படவிருக்கிறார் எனத் தெரியவருகின்றது.

இந்த வழக்கில் இருந்து இவரை விடுவிப்பதற்காக பணிப்புரையை சட்டமா அதிபர் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு விடுத்துள்ளார் என்றும் -

இந்த வழக்கு நாளை சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படும் சமயம் வழக்கில் இருந்து இவரை விடுவிப்பதற்கான உத்தரவை நீதிமன்றம் விடுக்கும் என்றும் - சட்டத்தரணியான அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார். (ம-3)

### மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீர் சோதனை நடத்தினர் என பிந்திய செய்தி ஒன்று தெரிவித்தது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பிரசன்னம் இல்லாமல் அலுவலகத்தைச் சோதனையிட அனுமதிக்க முடியாது எனத் தாம் பொலீஸாரிடம் தெரிவித்தனர் என்றும் - அதைப் பொருட்படுத்தாமல், அங்கிருந்த சிலரைத் தாக்கிவிட்டு உள் புகுந்த பொலீஸார் சோதனை நடத்தினர் என்றும் - பேரவை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ம-3)

### தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கு கௌரவம் செலுத்தவும் கூடிய நாட்டை ஏற்படுத்த சகல தனிப்பட்ட கருத்துக்களையும் புறந்தள்ளி நாட்டின் பிரதான கட்சிகளை இணைத்து, இந்த கட்சிகளுடன் இணைய விரும்பும் ஏனைய கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

எனக்கு சுயமரியாதை உண்டு. எனவேதான் இந்த யோசனையை முன்வைக்க என்னால் முடிந்தது. இது குறித்து நான் பெருமையடைகிறேன். ஏனைய விடயங்கள் குறித்து நான் பெருமையடையப் போவதில்லை என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

### மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறுதலாக வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயம் அடைந்ததாக ஒரு தகவல் கூறியது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையில் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இரவு வேளை நகரப் பகுதிகளில் பொலீஸ் மற்றும் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை -

நேற்று மாலை யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி மற்றும் மின்சார நிலைய வீதிப் பகுதிகளில் உள்ள கடைகளில் மாவீரர்களின் நினைவாக பறக்கவிடப்பட்ட கொடிகளை ஒவ்வொரு கடையர்கச் சென்று படையினர் அகற்றியுள்ளனர். சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நேற்று மாவீரர் நினைவு 'கட் அவுட்' கட்டிய வேளையில் படையினர் அதனைத் தடுத்ததால் பொது மக்களுக்கும் படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

பொலீஸார் ஸ்தலத்திற்கு விரைந்தனர். எனினும், நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனையடுத்து படை உயர் அதிகாரி வரவழைக்கப்பட்டு நிலைமை சமாளிக்கப்பட்டது. 'கட் அவுட்' அமைப்பதற்கு படை அதிகாரி அனுமதியளித்தார். (ம-117)


**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**இணைந்த கணிதம்**

ஆசிரியர்: திரு. S.செந்தில்றாஜ் (B.Sc.)

★ இருபடிச் சமன்பாடுகள் ★ தொடர்பு வேகம்

ஆரம்பம் 24-11-2003 திங்கள் 12.15 (ப.நே.)

★ குறிப்பாக A/L 2004 DAY CLASS

வெளிமாவட்ட மாணவர்களுக்கானது.

★ இவ்வலகுகள் மிக மெதுவாகவே கற்பிக்கப்படும். (24955) (30-13-16)



**சாரதி அனுமதிப் பத்திரம்**

சிறந்த, மிகவும் குறுகிய காலத்தில் பயிற்சியளிக்கப்பட்டு விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரமில்லாமல் வாகனம் ஓட்டுபவர்களுக்கு கனரக வாகனங்களுக்கானது (BUS) ஒரு கிழமையிலும், பாரம் குறைந்த வாகனங்களுக்கானதும் (VAN, CAR) மோட்டார் சைக்கிளுக்கானதும் நான்கு நாள்களிலும் சாரதி அனுமதிப்பத்திரம் உடனடியாக கொழும்பில் பெற்றுக்கொடுக்கப்படும்.

- யாழ். மாவட்டத்திலிருந்து வருபவர்களுக்கு கொழும்பில் தங்குமிடம் இலவசம்.
- பூரணமான விளக்கத்துடன் வீதி ஒழுங்கு சம்பந்தமான வகுப்புகளும் எழுத்துப் பரீட்சைகளுக்கான தயார்படுத்தல் வகுப்புகளும் நடைபெறும்.
- கனரக வாகனங்களுக்கான (BUS) சாரதி அனுமதிப் பத்திரம் எடுப்பதற்கு அடுத்த வருடம் சில மாற்றங்கள் வரலாம். எனவே, சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

தொடர்பு:-

**க.ரூபன்**

யுனிவேர்சல் சாரதிப் பயிற்சி நிறுவனம், 44B, முதலாம் மாடி, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு - 13.

T.P. No.: 071 298551, 0777 750023


**மரண அறிவித்தல்**

**இரத்தினராஜா புவனேஸ்வரி**

உடுப்பிட்டி, சந்தை வீதியை வசிப்பிடமாக கொண்ட இரத்தினராஜா புவனேஸ்வரி நேற்று(22.11.2003) சனிக்கிழமை இரவு காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சந்தை வீதி, உடுப்பிட்டி.* (25009) (22-13-17)

தகவல்: சி.இரத்தினராஜா (கணவர்)







இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.